www.tamilarangam.net


P. RAYA

# மனிதம்

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
SEINE FRANCE

11

வைகாசி. ஆனி 91



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மேதின எழுச்சி

எமது எழுச்சியின் நினைவுதினமே!
என்றுமே எமது எழுதுகோல்கள்
எதிர்த்து நொறுக்கிடுமே
ஏகாதிபத்திய தளைகளை!
எழுந்திடுவீர்!

அன்று ஆயிரத்து எண்ணூற்று எண்பத்தாறில்
ஆலையின் அணிவகுப்பாளர்கள்
அதிர்த்த ஆணையின் பின்னால்
ஆதவக் கதிர்களாய் ---- அகற்றி எறியுமே
ஆதிக்க வெறிகளை அகிலமே எங்குமே
ஆர்த்தே எழுந்திடுவீர்!

"எண்மணி" என வேலைக்கு ஏர்போலானதால்
எத்தனையோ பேரை 'ஹேமார்க் கெட்டிலும்'
எண்ணிக்கையில் எண்மரையும்
பிடித்து, எதிர்ப்புகள் மத்தியிலும்
நால்வரின் கழுத்திலே 'நார் வடம்'
மாட்டி நீ நகைத்தாலும்
நாளைய சந்ததி கிழித்து எறியுமே
மூலதன நார்களை
கிளர்ந்தே எழுந்திடுவீர்!

"சிக்காக்கோவின்" சிவந்த நாளிலே
சீமை எங்கும் சிவக்கப் போராடும்
தோழர்களே, தொழிலாளர்களே
தனிச் சொத்தரசுப் பொறியமைவை
தகர்த்தெறிய எழுந்திடுவீர்!

-- ச. ரகுபதி --

www.tamilarangam.net

# மனிதம்



இருண்ட தேசத்தில்
இடியின் தொடர்ச்சியாய்
இனங்களிடையே
உறவை இழந்தோம்
இந்திய சோதரர்
உறவும் ----
எம்மை விட்டு
உயரமாவதேன் !!!

ராஜீவ் கொலை செய்யப்பட்டார்.

எதிர்பாராத செய்தி !

முன்னாள் இந்திய பிரதமரும் இந்திரா காங்கிரசின் தலைவருமான ராஜீவ் காந்தி தமிழ்நாட்டில் வைத்து கொல்லப்பட்டுள்ளார். இச் சம்பவத்தில் மேலும் 11 பேர் கொல்லப்பட்டதாக செய்திகள் கூறுகின்றன.

இந்திய பொதுத்தேர்தலுக்கான பிரச்சார அமளியின் இறுதிநாள் !. இம்முறை இந்திரா காங்கிரஸ் வெல்லும் என்ற நம்பிக்கை, கணிப்பீடுகள் வலுத்திருந்த நிலையில் -அடுத்த பிரதமராகும் மகிழ்ச்சியில் மிதந்திருந்த ராஜீவ் காந்தி கொல்லப்பட்டு விட்டார்.

இந்தியாவின் முதல் பிரதமரான நேருவின் பரம்பரை ஆட்சியில் மூன்று காந்திகளும் இப்போ இல்லை!

இக் கொலையின் சூத்திரதாரிகள் சீக்கிய தீவிரவாதிகளோ, காஸ்மீர் போராளிகளோ, விடுதலைப் புலிகளாகவோ இருக்கலாம் என முதலில் செய்திகள் வெளிவந்தன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1984 இல் இந்திரா காந்தியை கொலைசெய்த சீக்கிய தீவிரவாதிகள் "இந்தியாவின் 'முடிசூடா மன்னர்' பரம்பரை ஆட்சியை உடைத்தெறிவோம். ராஜீவ் காந்தியையும் கொல்லுவோம்." என பிரகடனப்படுத்தியிருந்தது தெரிந்ததே. இருப்பினும் இன்று ராஜீவ் கொலைக் காரர்கள் சீக்கிய தீவிரவாதிகள் அல்ல, விடுதலைப் புலிகள்தான் என்ற செய்திகள் பலமாக ஒலிக்கத் தொடங்கியுள்ளன.

தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி 'புலிகள்தான் ராஜீவை கொலை செய்தவர்கள். ஆகவே இலங்கைத் தமிழர் எல்லோரும் தமிழ்நாட்டை விட்டு வெளியேறிவிட வேண்டும்' என்ற மிகவும் கீழ்த்தரமான ஒரு பிரச்சாரத்தில் இறங்கியுள்ளார்.

சுப்பிரமணிய சுவாமியோ 'புலிகள்தான் இந்த கொலையைச் செய்தவர்கள் - அதற்கான ஆதாரம் என்னிடம் உள்ளது' என்று அறிவித்தார். இவர் முன்னர் அமெரிக்காவில் இருந்தபோது புலிகளுக்கு ஆதரவாக செயற்பட்டவர்; பின்னர் இந்திய ஆக்கிரமிப்பு ஆதரவாளனாக தன்னை மாற்றிக்கொண்டவர்.

புலிகளின் பேச்சாளர் திலகர் இதுபற்றி கூறுகையில் "இலங்கைக்கு இந்திய இராணுவத்தை அனுப்புவதிலும், புலிகளுடனான இந்திய இராணுவத்தின் மோதலில் கணிசமான பங்களிப்பைச் செலுத்தியவருமான ராஜீவ் காந்தியின் கொலைக்கு புலிகள் காரணமல்ல. சுப்பிரமணிய சுவாமியிடம் ஆதாரம் இருப்பின் அதை வெளியிடட்டும்" என பதிலளித்துள்ளார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஈழப்போராளிகளால் தமிழகத்தில் அமைதி குலைந்து போனது என்ற சந்திரசேகரின் முனகலும், திமுக ஆட்சி கவிழ்ப்பும், அதனோடு ஏற்கனவே தமிழ்நாட்டில் 'ஈழத் தமிழ்ப் போராளிகளின்' தாக்குதல் நடவடிக்கைகளும் குண்டுவெடிப்புகளும் புலிகள் இதை செய்யக் கூடிய வலிமை படைத்தவர்கள் என்ற அபிப்பிராயத்தை மக்களிடம் ஏற்படுத்தியுள்ளது.

ஆனால் இதுவரை கொலையின் மூலகர்த்தாக்கள் யார்? என்பதற்கு வலுவான ஆதாரங்கள் எதுவும் இல்லை.

'அடியே அனார்க்கலி இந்த மண்ணில் உனக்குப் பிறகு உயிரோடு புதைக்கப்பட்டது ஜனநாயகம்தானடி...' என அழுது வடிந்துகொண்டிருந்த கருணாநிதியின் திமுக மீதும் ஆதரவாளர்கள் மீதும் இந்திரா காங்கிரஸ் வெறித் தனமான செயலில் ஈடுபடுகிறது.

வேதனையானது என்னவென்றால், இலங்கையில் அல்லல்பட்டு ஓடிச்சென்ற ஈழத் தமிழ் அகதிகள்மீது காடைத்தனம் கட்டவிழ்த்துவிடப் பட்ட செய்தி ஆகும்; இதில் 50க்கு அதிகமானோர் கொல்லப்பட்டதாகவும், அகதி முகாம்மீது கல்வீச்சு நடத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது. மேலும் நூற்றுக்கணக்கான ஈழத்தமிழர் கைதுசெய்யப்பட்டதாகவும் செய்திகள் வருகின்றன.

ஏற்கனவே எம்மவர்கள் கொலை, கொள்ளை, போதைவஸ்து வியாபாரம்... போன்ற சமூகவிரோத நடவடிக்கைகள் தமிழகம்வரை நீண்டிருந்ததால் மக்களிடம் ஏற்பட்டிருந்த கசப்பான உணர்வுகளும், அகதிகள் மீதான காங்கிரஸ் குண்டர்களின்/ஆதரவாளர்களின் தாக்குதலை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சுதந்திரமாக நடத்த அனுமதித்திருக்கலாம். ஆனால் இது இலங்கை தமிழ் அகதிகள் மீதான தமிழக மக்களின் தாக்குதலாக கொள்ளமுடியாது. குறிப்பாக சென்னையில் மட்டுமே இத் தாக்குதல்கள் நடந்திருக்கின்றன. அத்தோடு திமுக உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் மீதான தாக்குதலும் முரசொலி பத்திரிகை காரியாலயமும் தீயிடப்பட்டுள்ளது. இந்திய வங்கியொன்றும் உடைத்து களவாடப்பட்டுள்ளது. எனவே காங்கிரஸ் குண்டர்களின் ரவுடித்தனமும், விசுவாசிகளின் ஆத்திர உணர்வும் வெளிப்பட்டுள்ளன என்பதையே இவை தெளிவாக்குகின்றன.

இன்று இக் கொலைக்கு யாருமே உரிமை கோராத நிலையில் / அல்லது தெரியவராத நிலையில் இப் 'பழி' புலிகள்மீது விழுந்துள்ளதால், ஈழப்போராட்டத்துக்கான தமிழக மக்களின் தார்மீக ஆதரவை இது பாதிப்பதற்கான வாய்ப்பு உள்ளது. மேலும் சர்வதேச தொலைத் தொடர்பு சாதனங்களின் பிரச்சார நடவடிக்கைகள் ராஜீவ் ஒரு ஜனநாயகவாதி யாகவும் இந்தியா ஒரு மிகப்பெரும் ஜனநாயக நாடு எனவும், புலிகள்தான் இக் கொலையை செய்ததுபோலவும் அமைந்துள்ளன. இதுவும் சர்வதேச ரீதியில் தமிழ் மக்களின் போராட்டத்துக்கான தார்மீக ஆதரவை பாதிக்கவே செய்கிறது!

---

*ஒரு இறாத்தல் வெடிமருந்து ஒரு மனித உயிரை அழிக்க போதுமானது. இன்றோ ஆளுக்கு 10 தொன் (22,400இறா) வெடிமருந்து வீத அளவுக்கு இது குவிந்து போய் உள்ளது.*

www.tamilarangam.net

# ✲✲ புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் வெகு ஜன இயக்கங்களின் தேவை பற்றி ✲✲✲✲✲✲✲✲

"ஆயுதங்களை விட வலிமையானவை எழுத்துக்கள்" என்று எழுதிய எமது மண்ணில் ஆயுதங்கள் ஆட்சிபுரிகின்றன. 'ஏகாதிபத்திய இருள்' அமெரிக்கா என பேச முடிகிறது; 'இனவெறியன்' பிரேமதாசா என எழுத முடிகிறது. ஆனால் எமக்காக போராட எழுந்த இயக்கங்களின் தவறுகளை எமது மண்ணில் சொல்ல முடியவில்லை. இதுதான் எமது போராட்ட வரலாற்றில் நாம் வந்துசேர்ந்துள்ள இடம்!

இந்த நிலையை வந்தடைந்ததில் இன்று பலரிடம் எதிர்கால வாழ்வில் கேள்விக் குறிகளும், விடிவு கிடைக்குமோ என்ற நம்பிக்கையீனமும் ஏற்பட்டுள்ளது. வெளிநாடு வரும் இளைஞர் சமூகத்திலும் இவை குடிகொண்டிருக்கிறது. ஒரு சரியான இலக்கை நோக்கி எமது விடுதலைப் போராட்டம் முன்னேறும்போது ஏற்படக்கூடிய இழப்புகள் சகித்துக் கொள்ளக் கூடியதாகவும், சில சந்தர்ப்பங்களில் போராட்ட வீச்சின் ஒரு உந்துதலாகவும் அமையக்கூடியன. இது நிகழாதபோது ஏற்படும் அர்த்தமற்ற இழப்புக்கள் விரக்தியையும் ஒருவித பய உணர்வையும் ஏற்படுத்திவிடுவது இயல்பானதே!

எனவே ஒவ்வொருவரது மனநிலையும் உணர்வுகளும் அனுதாபத்தோடும் அரவணைப்போடும் நோக்கற்பாலது. இன்றும் இயக்கங்களிலிருந்து வெளியேறி வந்த/வரும் நல்ல சிந்தனையுள்ள பல இளைஞர்கள் போராட்ட வாழ்விலிருந்து முற்றாக ஒதுங்கிப் போய்விடுகிறார்கள். இந்த விரக்தி மனோநிலை இவர்களை காலப்போக்கில்

www.tamilarangam.net



இவ் வெளிநாட்டு சீரழிவுகள் இருந்துவிடுகிறது. அவர்களது கடந்தகால உழைப்பும் அனுபவ செல்வங்களும் வீணாவது தவிர்க்கப்பட வேண்டியது. எனவே இவர்கள் உதிர்களாக சிதைந்து, மாறுபட்ட இவ் வெளிநாட்டுச் சூழலின் பலியாகிப்போவதை தடுப்பதற்கும், அதற்கான ஒரு சூழலை முடிந்தவரையில் எங்கள் உருவாக்கிக் கொள்ளவும் அமைப்பு வழியில் (இயக்கத்தை குறிக்கவில்லை) ஒன்றுகூட வேண்டிய தேவை உள்ளது. நல்ல நோக்குடன், சமூகப் பொறுப்பை உணர்ந்த இவ்வகை அமைப்புகள் சுயாதீனமாக - அதாவது இயக்க எடுபிடிகளாக இல்லாமல் - தோன்ற வேண்டும்.

இன்று தமிழ் மக்கள் வந்தடைந்துள்ள இந்த அவல நிலைக்கு தனியே இயக்கங்களின் மட்டும் முழுமையாக குற்றம் சுமத்தும் விவாதங்கள் சர்வசாதாரணமாக வெளிப்படுகிறது. எமது சமூகத்திலிருந்தே இவ் இயக்கங்கள் தோற்றமெடுத்தன எனும்போது, எமது சமூகப் பண்புகள் இவ் இயக்கங்களில் எவ்வகை தாக்கம் புரிந்தன? என்பதும், ஒரு மனிதனது அடிப்படை ஜனநாயக உரிமையை எமது சமூகம் (தனது பங்கிற்கு) விட்டுக்கொடுத்த வழிமுறைகள் எங்கே? எப்படி? நடந்தேறின என்பதும் போராட்ட ஆரம்பத்திலிருந்தே அறியப்படாமல் இருந்துவிட்டன. இயக்கங்களின் மீதே முழுப் பொறுப்பையும் சுமத்திவிடுவதும், ஆயுதத்தால் மட்டும் எமது அடிப்படை ஜனநாயக உரிமை பறிக்கப்பட்டது என வாதம் புரிவதும் மிக எளிமையான விடைகள்தான்! - இது முழுமையானதா?

www.tamilarangam.net



எமது போராட்ட வரலாற்றில் - குறிப்பாக 1983 இலிருந்து இன்றுவரை - தமிழ் மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகள் பறிபோன அளவுகளையும், முறைகளையும் இக்கால இடைவெளியில் நடைபெற்ற சம்பவங்களோடும், மாற்றங்களோடும் இணைத்து நோக்கும்போது மேற்கூறிய கேள்விகளுக்கான விடைகள் புலப்படும். இவை சார்பான ஆய்வுகளுக்கும் கூட்டுமுறை விவாதங்கள், கருத்துப் பரிமாற்றங்களை செய்யவேண்டியுமுள்ளது. அதாவது அமைப்பு வடிவில் கூடவேண்டி உள்ளது.

இயக்கங்கள்தான் எமது போராட்டத்தின் இன்றைய அவல நிலைக்கு மிக கணிசமான பொறுப்பை ஏற்கவே-ண்டும் என்பதில் பெரும்பாலும் கருத்துவேறுபாடு இல்லை என்றும் மக்கள் சார்பில் இந்த ஜனநாயக பறிப்புகளுக்கான விட்டுக்கொடுப்புகள் இருந்தன என்பதையும் பார்க்கவேண்டியுள்ளது. இவைகள் கண்டறியப்பட்டு (இவ்வழிகள்) அடைக்கப்படுவதற்கான அடிப்படை அறிவை சமூகத்தளத்தில் வைத்து (முடிந்தளவு) நிகழ்த்த வேண்-டிய சமூகப் பொறுப்பும் இன்று வெகுஜன அமைப்புக-ளிடம் உள்ளன.

இன்று அடிப்படை ஜனநாயக உரிமை மறுக்கப்பட்ட எமது மண்ணில் இவ்வகை வேலைமுறைக-ளுக்கான வெகுஜன அமைப்புகள் தோன்றுவதற்கு இயக்கங்கள் அச்சுறுத்தலாய் உள்ளன. கணிசமானளவு இளை-ஞர் சமுதாயம் நாட்டைவிட்டு வெளியேறி வெளிநாடுகளில் உள்ள நிலையிலும், முற்போக்கான (சிறிய) இயக்கங்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புலிகளால் நசுக்கப்பட்டுள்ள இன்றைய நிலையிலும் மேற்கூறிய வேலை முறைகளை செய்யவேண்டிய தேவை, சாத்தியம் என்பன இவ் வெகுஜன அமைப்புகளிடம் உண்டல்லவா !

புத்திஜீவிகள், கவிஞர்கள் என குறிப்பிடத்தக்க அளவினரும் வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். இவர்கள்கூட வெகுஜன அமைப்புகளை கட்டியமைப்பதிலும் செயற்படுவதிலும் எந்தளவு ஆர்வம் கொண்டுள்ளார்கள் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. வெறுமனே உதிரிகளாக நின்று படைப்புகளையும் ஆய்வுகளையும் வெளியிடுவதோடு மட்டும் திருப்தி காணாமல் இக் கூட்டுமுறை செயற்பாட்டுக்குள் நம்மை உட்படுத்துவது நன்மையளிக்கக் கூடியது. இதன்மூலம் அவர்கள் தமது படைப்புக்களைக் கூட செழுமைப் படுத்தவும் முடியும்.

இதையும்விட, முழு இலங்கைக்கான புரட்சியா?, புதிய ஜனநாயகப் புரட்சியா?, தேசிய விடுதலையா? ---- போன்ற விவாதங்களில் (மட்டும்) சிலரின் காலம் கழிந்துவிடுகிறது. விவாதிக்கப்பட வேண்டிய பிரச்சினைகள்தாம் என்பதில் மறுபேச்சுக்கே இடமில்லை. ஆனால் இவ்வாறாக கருத்துரீதியில் / தத்துவார்த்த ரீதியில் உடன்பாடு கண்டாலே வெகுஜன அமைப்புகளை உருவாக்குவது அல்லது இணைந்துகொள்வது என்ற நிலைப்பாடுகள் தவறானதாகும். சமூகத்தின் இன்றைய தேவையும் சமூகப் பொறுப்புணர்வும் - இங்கு அவர்கள் கண்டுகொள்ளாமலே- புறக்கணிக்கப் பட்டுவிடுகிறது. இச் 'சிறிய' ஆனால் அவசியமான வேலைகளை செய்ய தயாரில்லாத நிலையில்

www.tamilarangam.net



'பெரிய' வேலைகளை மட்டும் செய்யப் புறப்படும் மனோநிலை காலத்தை கோட்டை விடுவதில் போய் முடியலாம். எனவே காலத்தின் அறைகூவலை, நமது சமூகப் பொறுப்புகளை இவ் உதிரிகள் சரிவர புரிந்து கொள்ள வேண்டும். அடிப்படை ஜனநாயக உரிமைப் போரா ட்டங்களிற்கான அடிப்படை அம்சங்களில் உடன்பாட்டுக்கு வருவதன் மூலம் வெகுஜன அமைப்புகளை அர்த்தப்படுத்த முடியும்.

இன்று வெளிநாடுகளில் 40 க்கு மேற்பட்ட தமிழ் வெளியீடுகள் வருகின்றன. கருத்துச் சுதந்திரத்தைப் பறி- கொடுப்பதில் அமைதி கண்டுவிடவோ, அல்லது 'ஒன்றுமே செய்ய முடியாது' என்ற மனோபாவமோ எம்மை ஆக்கி ரமித்துவிடவில்லை என்பதை இவை வெளிக்காட்டி நிற்கி ன்றன. இன்றைய நிலைமைகளின் பிரசவிப்பில் (இவைக -ளில் பல) இயக்க சார்பற்று வெளிவருவதும், பொதுக் கரு த்துக்களை எட்ட முனைவதும் தென்படுகிறது. இந்த அம்சமே பரஸ்பரம் ஒருவரை ஒருவர் திட்டித்தீர்ப்பது தவிர்க்கப் பட்டுள்ளதற்கான அடிப்படையாக உள்ளது.

ஒரு ஸ்தாபனத்தின் பாத்திரத்தில் ஒரு தொடர்பு சாதனமாக பத்திரிகையை வெளியிடுவது என்ற நிலைக்கு மாறாக, பத்திரிகைகளை வெளியிடுவதற்காகவே ஒரு க்களாக சேர்வது முழுமையானதல்ல. இது ஒரு வகை- யில் சிறிதளவு சுயதிருப்தி மனோநிலையை உள்ள டக்கியுள்ளது எனலாம். இன்றைய நலிவுற்ற சமூக சூழலும் மனோநிலையும் இதற்கு காரணிகளாக அமை வதால் இது தென்படுவதில் வியப்பில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இப் பத்திரிகைகளால், வெளியே புலப்படக்கூடிய தாக்கம் இல்லை என்ற நிலையில் இச் சுயதிருப்தி கூறுகளுக்கு தீனி கிடைக்காமல் போய்விடுகிறது. இந் நிலைமையானது பத்திரிகைக் குழுக்கள் இன்னமும் சிறு குழுக்களாக / உதிரிகளாக பிரிந்து போக ஒரு காரணமாகிவிடுகிறது. இதன் பிரதிபலிப்பாகவே, "பத்திரிகையை மட்டும் வெளியிடுவதில் திருப்திகாண முடியாது!; அடுத்த கட்டத்தை நோக்கி நகரவேண்டும்" என்ற கூற்று எழுகிறது. "எழுதுவதோடு மட்டும் நின்றுவிடாது செயலிலும் ஈடுபட வேண்டும்" என்ற உயர்ந்த உணர்வு இங்கே காணப்படுவதுடன் கூடவே, பத்திரிகையை வெளியிடுவது அல்லது பத்திரிகைக் குழுவில் இருப்பது 'ஒரு தாழ்ந்த மட்டம்' என்ற மனோபாவத்தின் வெளிப்பாடாகவும் இதை கருதவேண்டியுள்ளது.

ஒரு அமைப்பு தனது உள்ளடக்கத்தில் காண வேண்டிய வளர்ச்சி என்பதும், அது சமூகத்துடன் அல்லது மற்றைய அமைப்புகளுடன் கொண்டுள்ள தொடர்பு முறை என்பதும் ஒன்றாகப் போட்டு குழப்பப்பட்டுவிடுகிறது. அடுத்த கட்டம் முற்போக்கு இயக்கங்களுடன் தம்மை இணைத்துக் கொள்வதுதான் என்ற முடிவோடு இத் தளத்திலிருந்து விடுபட்டுப் போக எண்ணுவது பிழையானதாகும். இக் குறைபாடுகளுக்குக் காரணமே பத்திரிகைகளை வெளிக்கொணர்வதே (ஒரே) நோக்கமாக இணைந்து கொள்ளும் நிலைமைகள் ஆகும். ஒரு வெகுஜன அமைப்பின் தேவை அல்லது நோக்கத்தின் பரப்பில் நின்று செயற்படுவது என்பது ஒருவரது புரட்சிகர கடமையை அல்லது புரட்சிகர அமைப்புகளில் இணைந்து கொள்வதை தடைசெய்யும் என்பதல்லவே!

www.tamilarangam.net



இன்னும் பார்ப்பின், ஆக்கப் பற்றாக்குறைகள், நிதி பற்றாக் குறைகள், வேலைப் பளு ... போன்ற காரணங்கள் வலுப்பதும், இதனால் சஞ்சிகைகள் நின்றுவிடுவதும்கூட நிகழ்கின்றன. மேலும் ஆசிரியர் தலையங்கமே எழுதுவதில் இருந்து, 'சகல ஆக்கங்களுக்கும் ஆக்கதாரர்களே (முழுப்) பொறுப்பு' என எழுதிவிட்டு தப்பித்துக் கொள்வது ... போன்றவையானது அடிப்படைக் கருத்து எதிலும் உடன்பாடற்ற தன்மையின் வெளிப்பாடுகளாகும். ஒரு அமைப்பு தனது உள்ளார்ந்த வளர்ச்சியோடு பத்திரிகையை ஒரு தொடர்பு சாதனமாகப் பாவிக்கும்போது இக் குறைபாடுகள் தீர்க்கப்பட இலகுவாக இருக்கின்றன. மேலும் இந்த உள்ளார்ந்த வளர்ச்சியானது, எமது போராட்ட வரலாறுகளை திரும்பிப் பார்க்கும் ஒவ்வொரு கடவையும் இன்னமும் ஆழமான பார்வைகளை அனுபவிக்க வைக்கிறது.

இனி, அரசியல் நேர்மையுடன் வாழவும், பரஸ்பரம் புரிந்துணர்வுகளை வளர்த்துக் கொள்ளவும் - இவைகள் (ஒவ்வொருவரிலும்) பரிட்சிக்கப்படவும் ஓரளவு ஏதுவாக அமைகின்றது. மேலும் கூட்டு வேலைமுறைகளை பழகிக் கொள்ளல், தவறுகளை ஏற்றுக்கொள்ளும் மனோபாவத்தை வளர்த்துக் கொள்ளல், விமர்சனங்களுக்கு முகம் கொடுக்க பழகுதல் போன்ற வாழ்வியல் நெறிகளை சிறிதளவேனும் தரவல்லனவாக வெகுஜன அமைப்புகள் இருக்கவும் முடியும். இந்த வாழ்வியல் நெறிகளை, சமூகத்துக்கு தேவையான கருத்துக்களை அந்தச் சமூகத்திடம் எடுத்துச்செல்லும் தகுதியை/ஆளுமையை ஒருவருக்கு வழங்குகிறது.

இன்று மக்களிடம் பல கேள்விகள் எழுகின்

www.tamilarangam.net



பிரசவிப்புகளாக வருகின்றன. அசட்டை செய்யவோ அல்லது எதிர் நிலையில் நின்று (நிராகரித்து) பதிலளிக்கவோ கூடாத இக் கேள்விகள் பலவற்றுக்கு கூட்டுமுறை விவாதங்கள் தேவைப்படுகின்றன. மேலும், சூழல் மாற்றமடையும் என்பதை கவனத்தில் கொள்ளாது (இயங்கியல் அடிப்படையின்றி) முடிவுகளை எடுப்பது, நம்பிக்கையீனத்தை வளர்த்துக்கொள்வது ---- போன்ற பொதுத்தன்மைகளில் பல நல்ல நோக்கமுள்ளவர்களும் பலியாவதை தவிர்க்கவேண்டியுமுள்ளது.

உலக அரங்கில் இன்று ஏற்படும் அரசியல் மாற்றங்கள் பல ஆய்வுகளையும் கேள்விகளையும் எழுப்பிக் கொண்டிருக்கிறது. இவற்றை விவாதிப்பதிலும், தத்துவ வளர்ச்சியில் அறிவு பெறுவதிலும் இவ்வகை அமைப்புகள் கனமான உள்ளடக்கத்தை எடுத்துக் கொள்ளவும் முடியும். முற்போக்கு இயக்கங்கள்/சக்திகள் மீதான கருத்து ரீதியான தாக்கத்தை ஏற்படுத்தவும், ஐக்கியத்துக்கு துணைபுரிவதும்கூட இவ் வகை அமைப்புகளின் வளர்ச்சிப் போக்கில் சாத்தியமாகலாம்.

[ பி.கு : அரசியல் தன்மை வாய்ந்த வெகுஜன அமைப்புகள் பற்றியே இக் கட்டுரை குறிப்பிடுகிறது ]

• பாலமோகன் •

---

வாசகர்களே!

உங்கள் ஆக்கங்களையும்
விமர்சனங்களையும்
எதிர்பார்க்கிறோம்

MANITHAM
POSTFACH - 12
3000 BERN - 11
SWITZERLAND

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சின்னத் தம்பி

திரைப்படவிமர்சனம்

திரைப்படத் துறையானது எமது கலாச்சாரத்திலுள்ள பிற்போக்குத்தனமான அம்சங்களை பேணிக் காப்பதில் எவ்வளவு தூரம் அக்கறையாயுள்ளது என்பதற்கு சின்னத் தம்பி போன்ற திரைப்படங்களை உதாரணமாக கொள்ளலாம். இத் திரைப்படமானது எமது கலாச்சாரத்தின் பிற்போக்கு அம்சங்களான சோதிடம், பெண்ணடிமைத் தனம் போன்றவற்றை கொண்டதாக அமைந்துள்ளது. இத்திரைப்படத்தில் வரும் கருத்துகள் மக்களின் மேலும், மேலும் பிற்போக்கான கருத்துகளில் வேரூன்ற செய்யவே முனைகின்றன. இக்கட்டுரை எழுதுவதன் நோக்கம் இத்தகைய மக்களின் நடைமுறையை பிரதிபலித்து திரும்பவும் அதே வாழ்க்கை முறையை பேணிப்பாதுகாக்க உதவுகிறது இத்தகைய கருத்துகள் மக்களின் நடைமுறை வாழ்க்கையை பிரதிபலித்து திரும்பவும் அதே வாழ்க்கைமுறையை பேணிப் பாதுகாக்கவே உதவுகிறது.

முதலில் சின்னத் தம்பி திரைப்படத்தின் கதைச் சுருக்கத்தை மேலோட்டமாகப் பார்ப்போம். பணக்கார வர்க்க குடும்பம் ஒன்றில் மூன்று அண்ணன்மார்களுக்கு ஒரே தங்கையாக நாயகி பிறக்கிறாள் நீண்ட காலத்திற்கு பிறகு அந்த வம்சத்திற்கு பெண் குழந்தை பிறந்தமையால் அவள் மிகவும் செல்வமாக வளர்க்கப்படுகிறாள், அவளின் ஜாதக பலன்படி திருமண வயது வந்ததும் தனது விருப்பபடியே திருமணம் செய்து கொள்வாள் என்று சோதிடம் சொல்லப்படுகிறது. இதனால் அவளது அண்ணன்கள் மூவரும் வெளியுலகம் தெரியாமல் வீட்டுக்குள்ளேயே வைத்து வளர்க்கிறார்கள். நாயகி பெரியவள் ஆனதும், வெளியிடங்களுக்கு போகும் போது அவளுக்கு காவலுக்கான அடியாளாக நாயகன்

www.tamilarangam.net



அனுப்பப் படுகிறான். நாயகன் உடலிரீதியாக பெரியவனாக இருந்தாலும், உளரீதியாக குழந்தையாகவே இருக்கிறான். அவனது நல்ல உள்ளத்தை பார்த்து நாயகி அவன்மேல் காதல் கொள்கிறாள். சந்தர்ப்ப சூழ்நிலைகளால் நாயகன் அவளுக்கு தாலியை கட்டி விடுகிறான். நாயகன் ஏழை என்ற காரணத்தால நாயகியின் அண்ணன்கள் அவனை ஏற்க மறுக்கின்றனர். பின் நாயகி அண்ணன்களுடன் போராடி நாயகனுடன் சேருகிறாள். இவ்வளவுதான் கதையின் உள்ளடக்கம். அத்துடன் பாட்டுக்கள் சண்டைக்காட்சிகளை உள்ளடக்கி மசாலாப்படமாக எடுக்கப் பட்டுள்ளது.

அடுத்து சோதிடம் சம்பந்தமான கருத்துகளை மக்கள் மனதில் மேலும் பதிய வைக்க இயக்குனர் எவ்வாறு புனைகின்றார் என்பதைப் பார்ப்போம். நாயகி நாயகனை தனது விருப்பப்படி திருமணம் செய்து கொள்கிறாள். இதனால் சோதிடர் கூறியது உண்மையாக்கப்படுகிறது. இதைப்பார்க்கும் மக்களுக்கு சோதிடத்தின் மேலுள்ள மூட நம்பிக்கை மேலும் அதிகரிக்கவே செய்யும்.

சமூகத்தில் பெண்களுடைய உரிமைகள் எவ்வளவு தூரம் பறிக்கப்படுகிறது என்பதைப் பார்ப்போமாயின் சாதாரணமாக எமது பெண்கள் தமது வாழ்க்கைத் துணையை தாமே தேர்ந்து கொள்வதற்கு உரிய உரிமையை கூட எமது பெற்றோர் கொடுப்பதில்லை. இதற்கு இப்படத்தின் நாயகியையே உதாரணமாக கொள்ளலாம். நாயகி தங்களது விருப்பம் இன்றி மணம் முடித்து விடுவாள் என்ற ஒரே காரணத்துக்காகவே அவளை வெளியுலகம் தெரியாமல் வளர்க்கிறார்கள். ஆனால் நடைமுறைவாழ்க்கையில் அவ்வாறு இல்லாவிட்டாலும் கூட; பெண்கள் தாம் விரும்பியவரை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மணக்க சுதந்திரம் இல்லாதவர்களாகவே பெரும்பாலும் இருக்கிறார்கள்.

ஆரம்பத்தில் தோழிகள் கேட்கிறார்கள் "உனக்கு வீட்டுக்குள்ளேயே இருக்க எப்படி முடிகிறது? வெளியுலகத்தை இயற்கையை ரசிக்க விருப்பமாக இல்லையா?" என. அவள் கூறுகிறாள்; "எனக்கு வீட்டுக்குள்ளே இருக்கும் போதே எல்லாமே கிடைக்கிறதே நான் ஏன்? வெளியே போக வேண்டும்" என. அவள் குறிப்பிடுவது நகைகள், புடவைகளைத்தான். அவைகள் அவளுக்கு தாராளமாகவே கிடைக்கின்றன. இதனால் அவளது சுதந்திரம் பறிக்கப்பட்டதைக் கூட அவள் உணராமலே இருக்கின்றாள். இன்று எமது சமூகத்தில் வாழும் பெண்களும் கூட நகைகள், புடவைகள் மேல் தீவிர மோகம் கொண்டுள்ளமையால் அவைகள் தாராளமாக கிடைத்து விட்டால்; கணவன்மார்கள் எவ்வளவு தான் ஒடுக்குமுறைக்குள்ளாக்கினாலும், உரிமைகளைப் பறித்தாலும் அவற்றை உணர்ந்து கொள்வதில்லை. பெண்களும் தங்களைப்போலவே இந்த சமுதாயத்தின் ஒரு அங்கம் என்பதை ஆண்கள் புரிந்து கொள்ள வேண்டும். பெண்களும் தாமும் இந்த சமுதாயத்தின் அங்கம் ஆண்களின் அடிமை இல்லை என்பதை புரிந்து கொள்ள வேண்டும். மாறாக பெண்கள் தங்கள் நிலைமையை பற்றி புரிந்து கொள்ளாமல் அல்லது சிந்திக்க விடாமல் பொழுது போக்கு என்ற போர்வையில் ஆணாதிக்க கருத்துகளையே 'சின்னத் தம்பி' வரையிலான தமிழ்த்திரைப்படங்கள் பிரச்சாரம் செய்கின்றன.

விதவையான பெண்கள் எந்தவிதமான நல்ல காரியங்களிலும் பங்கு கொள்ளாது, வெள்ளைப் புடவை அணிவதுடன், பொட்டு வைக்காது, பூச்சூடாது வாழ வேண்டும் என்பது; காலா காலமாக கடைப்பிடிக்கப்பட்டு வரும் சம்பிரதாயம் ஆகும்.

www.tamilarangam.net



'சின்னத் தம்பி' திரைப் படத்தில் கதா நாயகனின் தாய் விதவை என்பதால் இவ்வாறு தான் வாழ்கிறள். நாயகன் தங்களது விருப்பம் இல்லாமலேயே தங்கையின் கழுத்தில் தாலியை கட்டி விட்டான் என்ற காரணத்துக்காக அவனை கொல்ல முயற்சிக்கின்றனர். அவன் எங்கே என்று அவனது தாயை கேட்க? அவள் சொல்ல மறுக்கிறள். அவளை கட்டி வைத்து அவளது புடவையை கலர் சாயத்தால் நிறமாக்கி; பொட்டு வைத்து, பூவைத்து விடுகின்றனர். இதனை காணச் சகிக்காத பெண்கள் தம் கண்களை மூடிக் கொள்கின்றனர். இங்கு நாம் நோக்க வேண்டிய முக்கிய விடயம் என்னவென்றல்? பெண்களே இத்தகைய சம்பிரதாயங்களை ஏற்று அப்படி வாழ்வது தான் தமக்கு பெருமை என எண்ணி தமது ஆசா பாசங்கள் உணர்ச்சிகள் என்பவற்றை அடக்கி வாழ்ந்து வருகின்றனர். ஆனால் ஆண்கள் மட்டும் மனைவியை இழந்த பின்னும் அதே அலங்காரங்களுடனும், விரும்பினால் வேறு ஒரு பெண்ணை மணம் முடிக்க உரிமையுள்ளவர்களாகவும் காணப்படுகிறர்கள். ஆனால் பெண்கள் மட்டும் அந்த உரிமைகள் பறிக்கப்பட்ட நிலையில் உணர்ச்சிகளை அடக்கி வாழ்கிறர்கள்.

இவ்வாறன பிற்போக்குத்தனமான கருத்துக்களைக் கொண்ட சமூகமாகத்தான் இன்றும் எமது சமூகம் உள்ளது. சம்பிரதாயங்களிலும் அறியாமையிலும், மூடத்தனங்களிலும் மூழ்கிக் கிடக்கும் மக்களை மேலும் அவற்றில் உழல வைக்கும் பணியையே இன்றைய தமிழ்த் திரைப் படங்கள் ஆற்றுகின்றன. தமிழ் திரைப்படத் துறையில் சமூகத்துக்கு ஆரோக்கியமான கருத்துக்களை கொடுக்க கூடிய திரைப்படங்கள் குறைவு என்றே சொல்ல வேண்டும். - உமையாள் -

---

ஆதி உயிரினங்கள் கந்தகத்தில் உயிர் வாழ்ந்தன. பின்னர் அவைகளில் சில பிராணவாயுவை வெளியிடத் துவங்கியதும், காற்று-சுவாசிகள் பூமியில் தோன்றின.

www.tamilarangam.net


**விவாதம்:** இன்று விடுதலைப்புலிகளை தேசிய சக்திகள் என்றும் அவர்களுடன் ஐக்கிய முன்னணியை கோரும் அமைப்புகளாலும் குழுக்களாலும் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. அதையொட்டி விவாதங்களை தொடருமுகமாக சென்ற இதழில் "வாசன்" எழுதிய கட்டுரையை யொட்டி இலங்கையிலிருந்து வந்த இக் கட்டுரையை தந்து பிரசுரிக்கிறோம்.

இன்று விடுதலைப்புலிகளை தேசியசக்திகள் என்போரும் விடுதலைப்புலிகளுடன் ஏனைய இயக்கங்கள் அல்லது முற்போக்கான குழுக்கள் ஐக்கிய முன்னணி அமைத்து போராட வேண்டும் என்று கூறுவோரும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ஜப்பானுக்கெதிராக சியாங்கே சேக் உடன் ஐக்கிய முன்னணி அமைத்ததை உதாரணமாக கூறுகின்றனர். எனவே சீனக்கம்யூ-னிஸ்ட் கட்சி ஜப்பானுக்கெதிரான யுத்தத்தில் ஐக்கிய முன்னணி அமைத்த குறிப்பான சூழலையும், எமது சூழலையும் நோக்குவோம்.

சீனக்கம்யூனிஸ்ட் கட்சியானது, சீனப்புரட்சியின் சாராம்சமாக நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு ஏகாதிபத்திய எதிர்ப்பு எனும் அடிப்படையில் தனது வேலைத்திட்டத்தை வகுத்திருந்தது. கம்யூனிஸ்ட் கட்சியானது இவ் எதிர்ப்புகளை உறுதியாக தொழிலாள - விவசாய தலைமையின் கீழ் முன்கொண்டு செல்லும் நோக்கிலும், தொழிலாள - விவசாயிகளை ஸ்தாபனமயப்படுத்தவும் ஸ்திரமான ஒரு சூழலில் தன்னை வளர்த்து வரும் போது ஜப்பானிய எதிர்ப்பு சக்திகளுடன் ஐக்கிய முன்னணி என்னும் மூலோபாயம்

தவிர்க்க முடியாததாகியது ஸ்தூலமான ஸ்தாபனம் (பாட்டாளி வர்க்க ஸ்தாபனம்) மக்கள் அணிதிரட்டிய பிரதேசங்கள் என்பவற்றின் பின்னணியில் அந்த ஐக்கிய முன்னணிக்கு அர்த்தம் உள்ளது. கம்யூனிஸ்ட் கட்சியானது, தனது ஏகாதிபத்திய எதிர்ப்பு உறுதியான கண்ணோட்டத்தில் வளர்த்தெடுக்கப்பட்ட நிலையில் உழைக்கும் சக்திகளுடனான உறவு காலப்போக்கில் அவர்கள் வென்றெடுத்து தலைமையைக் கைப்பற்றக் கூடிய யதார்த்தத்தை இனம் கண்டது. கட்சியானது, ஐக்கிய முன்னணியில் வெறுமனே தேசியவாதத்தை மட்டும் கைக்கொள்ளவில்லை. பாட்டாளிவர்க்க கருத்தமைவில் எவ்வித சரணாகதியும் செய்யாது முற்போக்கு தேசியவாதத்தை உட்கொண்ட பரந்த ஆளுமை கொண்ட ஐக்கிய முன்னணியாக முன்னெடுக்க முடிந்தது. ஆகவே தேசிய முதலாளித்துவ சக்திகளின் முற்போக்கு பிற்போக்கு அம்சங்களின் பலங்கள் கூட, ஓர் வளர்ச்சிப்போக்கில், ஓர் பாட்டாளி வர்க்க ஸ்தாபனத்தின் பலமான இருப்பில் தீர்மானிக்கப்படும். அவ்வாறான ஸ்தாபனத்தின் இருப்பு இல்லாதவிடத்து அதற்கான சூழல் காரணிகளை புரிந்துகொண்டு, ஆதிக்க அரசியலின் பலம், சமூகத்தன்மை ஸ்தாபனத்தை கட்ட கால பிரதேச இடைவெளிகள் பற்றி சிந்திக்க வேண்டும்.

தமிழ் மக்களின் விடுதலை போராட்டத்தின் இன்றைய கட்டத்தை நாம் பார்ப்போமாயின் சிறீலங்கா அரசுக்கெதிராகப் போராடக்கூடிய அனைத்து

www.tamilarangam.net



சக்திகளையும் ஐக்கியப்படுத்தாமல் அவர்கள் மீது நடாத்தப்பட்ட கொடூரமான தாக்குதல்களால் அவர்கள் போராட்டத்தில் இருந்து அந்நியமாக்கி உள்ளார்கள். சாதாரண சுயாதீனமான மக்கள் அமைப்புகள் கூட தடை செய்யப்பட்டுள்ளன. புலிகள் தமது கொடூரமான அழிவு அரசியலின் ஊடாக அரசியல், பொருளாதார, சமூக, இராணுவரீதியில் மேலாதிக்கத்துக்கு வந்துள்ளனர். தொடர்ச்சியாக சமூகத்தில் உள்ள நட்பு முரண்பாடுகளை கூர்மையாக்கி இலட்சிய வேட்கை கொண்ட இளைஞர் சக்தியை சின்னாபின்னப் படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். மக்கள் சிந்திக்க விடாது மாற்றுக் கருத்துக்கள் அனைத்தையும் தடை செய்து குறுகிய வெற்று இலட்சியப் பதாகையை தூக்கிப்பிடித்து, திட்டமிட்ட வகையில் உண்மைகளை மறைத்து துப்பாக்கியின் பிடியில் கோலோச்சுகின்றார்கள். தமது அழிவு அரசியலின் காரணமாக தமிழ்மக்கள் மீது இறுதியுத்தம் எனும் போர்வையின் கீழ் யுத்தம் ஒன்றை திணித்துள்ளார்கள். மறுபுறம் முற்போக்கு இயக்கங்கள் என கருதப்பட்ட அல்லது இடதுசாரி இயக்கங்கள் என கருதப்பட்ட சிறிய ஸ்தாபனங்கள் எல்லாம் இன்று ஸ்தாபன பலமிழந்து அடக்கு கிடுக்கில் நிற்க முடியாத சூழ்நிலையில் இருக்கின்றன.

அண்மைக்கால வரலாற்றின் ஆதிக்கம் செலுத்தும் அரசியலின் வளர்ச்சி பற்றி ஏதுவித கணக்கும் எடுக்காது, ஒவ்வொரு குழுவும் ஐக்கியமின்றி

www.tamilarangam.net


தேசியசக்தி எனும் தாரக மந்திரத்தை உச்சரிப்பதன் மூலம் ஸ்தாபனம் கட்டும் தந்திரோபாயம் நடைமுறையில் ஆதிக்க சக்திகளின் வால்பிடிகளாக அதன் பின்னால் தொங்கி நிற்கவே உதவும். எதிர்ப்பு யுத்தம் என்னும் போர்வையின் கீழ், மக்களை பகடைக் காய்களாக்கி ஒரு குறிப்பிட்ட குழு அல்லது வர்க்க நலன் அடிப்படையில் வளர்க்கப்பட்ட அரசியல் காலப்போக்கில் அதிக அடிப்படை, பொருளாதார அடித்தளம், சர்வதேச அரசியல் சக்திகளின் ஈடுபாடு ஆகிய சேர்மானங்களினால் தனக்கே உரிய அபாயகர போக்குகளை வளர்த்து அதன் சிறைக்கைதியாகி, வெளியில் மிகவும் உறுதியான போராட்ட வடிவமாகக் காண்பிக்கும். ஆனால் உள்ளார்ந்த ரீதியில் மிகவும் பலவீனமானதாக இருக்கும். அது மட்டுமல்லாது மிகவும் பிற்போக்கான சிந்தனையின் அல்லது கருத்தமைவின் ஆதிக்கத்தில் அது தொழிற்படும். இத்தகைய போக்கின் ஆரம்பகால வளர்ச்சிக் கட்டமாயின் ஓர் மக்கள் சார்ந்த விடுதலை இயக்கம் தனது சமாந்தர வேலைத்திட்டத்தில், ஏனைய இயக்கங்களின் பின் உள்ள புரட்சிகர தன்மையை கவனத்தில் எடுத்துக் கொண்டு ஐக்கியமும் போராட்டமும் என்னும் வேலைமுறையைக் கைக்கொள்ளலாம். ஆனால் இன்று முன்னைய போக்கு தனது அழிவு அரசியலின் ஊடாகவும், கொடூரமான அழித்தொழிப்புகள் ஊடாகவும் தலைமைக்கு வந்து தன்னை நிலை நிறுத்திய பின், தொடர்ச்சியாக அழிவு அரசியலின்

www.tamilarangam.net



பின்னணியில் புலிகள் யுத்தத்தை தொடர்ந்து கொண்டிருக்கின்றனர். இக்கட்டத்தில் ஐக்கியமும் போராட்டமும் என்பது எமது விருப்பமாக இருக்குமே அன்றி, சாத்தியமானதாகவோ அல்லது அழிவு அரசியலில் சிக்கி தவிக்கும் மக்களை விடுவிக்கவோ அல்லது புலிகளின் பின்னால் உணர்வுபூர்வமாக மாயும் ஆயிரக்கணக்கான இளைஞர் சக்தியை ஒன்று சேர்க்கவோ முடியாது.

மேலும் ஏகாதிபத்திய எதிர்ப்பு எனும் அடிப்படையில் பார்த்தால் ஏகாதிபத்திய எதிர்ப்பு ஐக்கிய முன்னணியின் தேவை "மக்கள் விடுதலையை" உத்தரவாதம் செய்யும் நிலையிலேயே அர்த்தம் உள்ளதாய் இருக்கும். மக்கள் விடுதலையை உத்தரவாதம் செய்யும் அரசியல் இன்றி, ஆளும்வர்க்க ஏகாதிபத்திய உள்முரண்பாட்டின் விளைவாக உருவாகும் போராட்டத்தின் சாராம்சமானது, ஏகாதிபத்திய எதிர்ப்பு - மக்கள் சார்ந்த பிணைப்பு இல்லாமல் இருக்கும் போது, மக்கள் சார்ந்த அரசியலை சொற்றொடரில் கரைத்து, ஏகாதிபத்திய எதிர்ப்பு எனும் போர்வையின் கீழ் மக்கள் விரோத தேசிய (இன, மத) வாதிகளின் நடைமுறைகளுக்கு முண்டு கொடுக்கும் வேலையையே நாம் செய்வோம். எனவே ஏகாதிபத்திய எதிர்ப்பில் இருந்து மக்கள் சார்ந்தது எனும் இலகுபடுத்தப்பட்ட சூத்திரத்தின் தவறை உணர வேண்டும். மக்கள் சார்ந்த அரசியலில் இருந்து ஏகாதிபத்திய எதிர்ப்பு அரசியல் தீர்மானிக்க வேண்டும்.

எதற்காக போராடுகின்றோம் என்னும் போது

www.tamilarangam.net



எமது பார்வையில் வடிவத்திற்கும், உள்ளடக்கத்திற்குமான தொடர்பை, பிரிவை இனம் கண்டு கொள்ள வேண்டும். அப்போராட்டத்தின் ஊடாக எதை உருவாக்குகின்றோம் என்ற ஆழமான புரிந்துணர்வு இருக்க வேண்டும். இவை இன்றி, சரியான மார்க்கம் அடித்தளம் இன்றி போராட்டத்தை முன்னெடுப்போமாயின் பல்வேறு அழிவுகளுக்கு பின்னர் ஏகாதிபத்தியத்தின் கைப்பிடிக்குள்ளேயே மேலும் செல்வோம்.

போராட்டப் போக்கில் மக்கள் பலப்படுத்தப்படுகின்றார்களா? சமுதாயம் ஏகாதிபத்தியத்தின் பிடிக்குள் விழாமல் இருக்க பொருளாதார - கலாச்சார - அரசியல் அடித்தளம் இடப்படுகின்றதா. ஓர் ஆரோக்கியமான சூழலிற்கு அத்திவாரம் இருக்கின்றதோ என்பதே பிரதான கேள்வி.

எனவே இக்கட்டத்தில் புலிகளின் அழிவு-அரசியலிற்கும் இலங்கை அரசின் சிங்கள பௌத்த இனவாதத்திற்கும், இன ஒடுக்குமுறைக்கும் எதிராக கறாராக போராடுவதன் மூலமே, புலிகளின் அழிவுஅரசியலின் பிடியில் இருந்து மக்களை விடுவித்து மக்களின் மாண்பின் அடிப்படையில் மக்கள்சக்தியை வெளிக்கொண்டு வர முடியும்.

தமது கையாலாகாத்தனம் காரணமாகவும், தமது அரசியல் வங்குரோத்துத்தனம் காரணமாகவும் களைத்துப் போன சில மார்க்சியவாதிகள் தாம் எதிரியென யாரை பறைசாற்றினார்களோ அவர்களுக்கெதிராக ஒரு துரும்பைக் கூட அசைக்கமுடியவில்லை. இந்த விரக்தியில் மக்கள்

www.tamilarangam.net



விரோத சக்திகள் (புலிகள்) படு பிற்போக்கான கருத்தமைவின் பின்னணியில் மக்களின் உயிரோட்டமுள்ள ஆற்றல்கள் தமது பாசிச அரசியலின் மேலாதிக்கத்தால் அழிவுத்திசையில் நெறிப்படுத்தி பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் போது இப்பாதிப்புகள் பார்த்து களைத்துப் போன மார்க்சியவாதிகள் தமது அங்கலாய்ப்புகள் நிறைவேறுவதாக உணர்கின்றனர். இதன் காரணமாக எதிர்ப்பு யுத்தம் அல்லது தடுப்பு யுத்தம் என்னும் பின்னணியில் இவற்றிற்கு முண்டு கொடுக்கும் வேலைய் செய்கின்றனர். மக்கள் பகடைக்காய்களாக பாவிக்கும் பிற்போக்கு அரசியல், அது எதிரிக்கெதிராக இருக்கின்றது என்ற ஒரே காரணத்திற்காக மட்டும் நியாயப்படுத்துகின்றார்கள். எதிரிக்கெதிரான எல்லாம் மக்களுக்கு சார்பானதல்ல. ஆனால் மக்களுக்கான ஸ்தாபனம், புறநிலையாக ஓர் அடிப்படை உள்ள கட்டத்தில் (வளர்ச்சிக் கட்டத்தில்) எதிரிக்கெதிரான சக்திகள், நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ சரியான மூலோபாயங்கள் வகுப்பதன் மூலம் மக்களுக்கு சார்பாக மாற்ற முடியும். எனவே எதிரியின் எதிரி நண்பன் என்பது ஸ்தூலமான சூழலில், புறநிலை சக்திகளின் வளர்ச்சி மட்டத்திலேயே தீர்மானிக்கப்படுகின்றது. அது வெறும் மூலோபாயம் பற்றிய பிரச்சினை மட்டுமே. கோட்பாட்டுப் பிரச்சினை அல்ல.

- K.S -

1971 இலிருந்து 1984 இடைக்கால பகுதியில் உலகின் 300 கதிரியக்க நிலையங்களில் (Nuclear Stations) மொத்தம் 151 மோசமான விபத்துக்கள் நடந்துள்ளன.

www.tamilarangam.net



# தேசங்கள் எம் குறையை

சாதிக் கொடுமை மேலும்
கொழுந்துவிட்டெரிகின்றன - மேலும்
ஊத வேடிக்கை பார்க்கவும்
மானிடக் கூட்டம் இங்கிருக்கின்றது
கோதிக்குடைந்தெருத்தாலும்
ஆங்காங்கே தலைகாட்டுகின்றது
நாதியற்ற நாயகர் நாம் - இதை
யாரிடம் கூறியாறுதலடைவது
இருமொழியுண்டு நம்நாட்டில்
நாமிருப்பதோ அந்நிய மண்ணில்
ஒருபுறம் சாதிக்கொடுமையின் சவுக்கடி
எம்மை நெருடுகின்றது
உருக்கொண்ட அரசின் தாக்கம்
மறுபுறம் ஏக்கத்தைத் தருகின்றது
தருணம் பார்த்து சந்தர்ப்பவாதம்
தலை காட்டி நிற்கின்றது
தொழிலைப் பிரித்துக் கொடுத்து
பொதிசுமக்க வைத்தார்களன்று
எளிதில் புரியுமுங்களுக்கு
இதுதான் பூர்வீகமென்று
விழிப்புடன் நோக்கின் - எப்படி
சமுகமைப்புருவானதெனப்புரியும் - இருந்தும்
அகழியிலே ஊறுகின்றீர்கள்
அநாகரிகமிது உணரவில்லையா

www.tamilarangam.net



உரிமைப் போராட்டத்தில்
வேறுபட்டு நிற்கவுமில்லை நாம்
கருமை கொள்கை கரமேற்று
திசைமாறிப் போனதுமில்லை
எரிமலைபோல் ஒன்றுசேர்ந்தோம்
பாசிசத்திற்கெதிரான போராட்டத்தில்
மரித்துவிட்ட சாதி மாயப்பேயை
உயிர்த்தெழ விடாதீர்கள்
வெளிநாடு என்றவுடன்-இங்கு
வேற்றுமையேதும் இல்லையாம்
தாளிக்கின்றார்கள் கதையை மேலும்
போல்வாசனை யெழுப்புவதற்கு
தெளிவுடன் கூறின் தேடலில்லை
நாமும் மனிதர்தான் ஏற்பின் சரி - ஆனால்
நெளிந்து செல்லும் நதி கடலடைதல் போல்
எஃதிலைப்பது பழைய பல்லவி தான்
வெந்தமனதுடனே முன்வைக்கின்றேன்
இந்த நாகரிகமான கோரிக்கையை
பந்தாட நினைக்காதீர்கள் எம் உணர்வுகளை
உங்களுக்கிது கேளிக்கையல்ல
மந்தமாக சிந்தித்து உங்கள் ஞானத்தை
மழுங்கடிக்கவைக்காதீர்கள்
ஐந்தறிவு படைத்த ஜடமல்ல நீங்கள்
ஆதலில் உளமார எங்கள் ஏக்கத்தை
உணருங்கள்.

- திடவூரான் (ஜானி)

www.tamilarangam.net



# மே தினம்:

## தொழிலாளர்களுக்கு ஓர் ஆன்மீக உந்தல்?

உலகெங்கும் வாழும் ஒடுக்கப்படும் தொழிலாளர்களின் நாளாக 'மே' மாதம் முதல் திகதி அறிவிக்கப்பட்டு நூறு ஆண்டுகளுக்கு மேலாகக் கொண்டாடப்பட்டுவருகின்றது. இன்று இத்தினமானது ஒடுக்கும்வர்க்கத்தை நடுநடுங்கவைக்கும் ஓர் எழுச்சி மிக்க நாளாக; தொழிலாளர்களின் ஒன்றுபட்ட சக்தியினை புரியவைக்கும் நாளாக; அவர்களுக்கு ஓர் ஆன்மீக உந்தலைக்கொடுக்கும் நாளாக இல்லாமல்போய் வெறும் சடங்காக எமது நாட்டிலும் ஏனைய நாடுகள் பலவற்றிலும் கொண்டாடப்பட்டுவருவது ஏன் என்று பார்ப்பதே மேதினம் கொண்டாடப்படவேண்டியதற்கான நோக்கத்தையும் எப்படிப்பட்ட சூழலில் கொண்டாடப்படல் வேண்டும் என்பது பற்றியும் அறிந்துகொள்ள ஏதுவாக இருக்கும்.

வரலாறு கண்ட போராட்டங்கள் அனைத்திலும் உழைக்கும் மக்கள் தங்கள் பலம் எத்தகையது என்பதை புரியவைத்ததையும் சமுதாய நலனுக்காக அவர்கள் செய்த தியாகங்களையும் சிந்திய இரத்தத்தையும் யாரும் மறந்திருக்கமுடியாது. எமது நாட்டிலும் அது விதிவிலக்கல்ல. எமது நாட்டில் இடதுசாரி கருத்துக்கள், இயக்கங்கள் முளைவிடத் தொடங்கிய நாட்களில் இடதுசாரி அமைப்புகளிற்கு உழைக்கும் மக்களிடமிருந்த செல்வாக்கும் அவ்வமைப்புகளின் செயல்திட்டங்களில் உழைக்கும் மக்கள் பங்கு கொண்டு செய்த சாதனைகளும் அளவிடமுடியாதது.

இலங்கையில் இனவெறி U.N.P அரசானது 77ம் ஆண்டு ஆட்சிக்கு வந்தபின் தொழிலாளர்கள் மிகவும் ஒடுக்குமுறைக்குள்ளாக்கப்பட்டனர். U.N.P அரசானது "சுதந்திர வர்த்தக வலையம்" என்ற பெயரில் பன்னாட்டு ஏகபோககம்பனிகளும் மூலதனமிட்டு இலங்கையை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சரண்ட அமைத்ததோடு அத்தம்பனிகள் தடையின்றி தமது சுரண்டலை செய்வதற்கு ஏதுவாக தொழிலாளர்களின் தொழிற்சங்க உரிமைகளை கட்டுப்படுத்தியது. மேலும் அங்கு வேலைசெய்யும் பெண் தொழிலாளர்கள் நீண்டநேரகடின உழைப்பு, இரவுவேலை, குறைந்த ஊதியம் போன்றவற்றால் மிகவும் ஒடுக்குமுறைக்குள்ளாக்கப்படுகிறார்கள்.

இலங்கைக்கு சுதந்திரம் கொடுக்கப்பட்ட ஆரம்பகாலங்களில் இடதுசாரி அமைப்புகள் தாம் தொழிலாளர்கள் மத்தியில் வலுவுள்ள பலம் வாய்ந்த தொழிற்சங்க அமைப்புகளை உருவாக்கி குறிப்பாக அன்று மலையகத்தில் தோட்டத்தொழிலாளர்கள் மத்தியில் இவ் இடதுசாரி அமைப்புகளின் செயற்பாடுகள் நம்பிக்கையூட்டுவதாகவும் போர்க்குணாம்சம் கொண்டதாகவும் இருந்தன அதனால் தான் அன்றைய தேர்தலில் 10க்கு மேற்பட்ட இடதுசாரி அங்கத்தவர்கள் மலையகத்தில் மட்டுமிருந்து பாராளுமன்றத்திற்கு தெரிவாகினர். ஆனால் நாளடைவில் இவ்வமைப்புகள் தமது செயற்பாடுகளை பாராளுமன்றம் செல்வது ஒன்றை மட்டுமே நோக்காகக் கொண்டு வெறும் தொழிற்சங்க நடவடிக்கைகளுடன் குறுக்கிக்கொண்டன. அதாவது அரசுக்கெதிரான தொழிலாளர்களின் எழுச்சிகள்யாவும் வேலைநிறுத்தம், ஊர்வலம், பொதுக்கூட்டம் என்பனவற்றுடன் அடக்கப்பட்டுவிட்டது. இத்தகைய தொழிற்சங்கங்களின் துரோகங்களுக்கு சிறந்த உதாரணம் 1981ம் ஆண்டு வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களின் வேலைகளை யு.என்.பி அரசு பறித்தபோது அதை அரசியல் போராட்டமாக வளர்த்தெடுக்க இயலாமல் சரணடைந்தனர். இதனால் இவர்களை நம்பி இன்று எத்தகைய போராட்டங்களிலும் இறங்க தொழிலாளர்கள் தயக்கம் காட்டுகின்றனர். இந்நிலையில் வலது சாரிக்கட்சிகளின் சலுகைகள், இன, மதவெறிக் கருத்துக்கள் மூலம் தொழிலாளர்கள் மத்தியில் பிளவுகளை உண்டுபண்ணி தொழிற்சங்கங்களைஉருவாக்கின. இன்று எமது நாட்டில் இத்தகைய பல

www.tamilarangam.net




கட்சிகளாலும் அமைப்புகளாலுமேயே மேதினம் 'பெரிதாக' விளம்பரப்படுத்தப்பட்டு கொண்டாடப்படுகிறது. இக் கொண்டாட்டங்கள் அநேகமாக ஊர்வலம், பொதுக்கூட்டம், கலைவிழா போன்ற சம்பிரதாயமான சடங்குகளாக இடதுசாரிக்கட்சிகளாலும், கொள்கைகள் மிகுந்த கொண்டாட்டம் போல் வலதுசாரிக்கட்சிகளாலும் கொண்டாடப்பட்டு வருகிறது. தெற்காசியாவிலே அதிக அங்கத்தவர்களைக் கொண்ட தொண்டமானின், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மலையக தோட்ட தொழிலாளர்களின் ஒடுக்குமுறையையும் இழிநிலையையும் மறைத்து வெறும் தலைமை வழிபாடுகளிலான கொண்டாட்டங்களில் ஈடுபடுகின்றது. இத்தகைய அமைப்புக்கள் தொழிலாளர்கள், அவர்களின் பிரச்சனைகளை முன்வைத்தல் அதற்கான நடவடிக்கைகளில் இறங்குதல், அரசியல் போராட்டமாக வளர்த்து செல்லல் போன்ற உணர்வு பூர்வமான நடவடிக்கைகளைச் செய்வதில்லை இவர்களால் கொண்டாடப்படும் மேதினங்கள் தொழிலாளர்களை உணர்வு பெற்றவர்களாக உருவாக்குவதற்கான ஆன்மீக உந்தலை ஏற்படுத்தும் நாளாக அமைவதில்லை.

மேதினம் - அது கொண்டாடப்படுவதன் நோக்கமானது சிக்காக்கோவை நூறு ஆண்டுகளுக்கு மேலாக சம்பிரதாய பூர்வமான சடங்காக நினைவுகூருவதையல்ல, இத்தகைய சடங்குகள் அதன் நோக்கத்தையே திசை திருப்பிவிட்டன. எப்படி கிழக்கு ஐரோப்பிய "சோஷலிசம்" திரை கிழிக்கப்பட்டதோ அப்படியே மேதினத்தை சூழ்ந்துள்ள கறைகளும் அகற்றப்பட்டு அதன் நோக்கங்கள் தெளிவுபடுத்தப்படவேண்டும். அடக்கியொடுக்கப்படும் உழைக்கும் மக்களுக்கு மண்ணுலக சொர்க்கத்தின் கதவுகளை திறக்கும் நம்பிக்கையை கொடுக்கும் நாளாக மேதினம் அமையவேண்டும்.

- சி. வசந்தன்.

www.tamilarangam.net






இலங்கையில் இன்றுள்ள பிரச்சனைகளை பலர் பலவிதமான முறைகளில் வெளிப்படுத்திக் கொண்டு வருகிறார்கள். ஆனாலும் அவர்கள் இன்று இலங்கை இப்படியான நிலைமைக்கு எவ்வாறு வந்தது என்பது பற்றியோ? இப்பிரச்சனையில் இருந்து மீள என்ன செய்யலாம் என்பது பற்றியோ? பாரிய அளவில் அக்கறையின்மையே காணப்படுகிறது. ஒரு சிலரே தங்களுடைய வேலைத்திட்டத்தை முன்வைக்கின்றனர். இன்று பெரும்பாலானோர் அராஜகத்தை எதிர்க்கின்றனரே ஒழிய; இது தோன்றுவதற்கு காரணமான நிலைமைகள் என்ன?. அதை இல்லாமல் செய்ய என்ன செய்ய வேண்டும்? என்பதை தெரியாமல் இருக்கின்றனர். பத்திரிகை வெளியீடுதனை புரட்சிக்கு செய்யும் உச்ச கட்ட பங்களிப்பாக கருதுகின்றனர், சிங்கள, முஸ்லீம், மலையக மக்களின் சமூக விடுதலையை விரும்புகின்ற பலர் தனியே ஒரு பத்திரிகை நடாத்துவதன் மூலம் திருப்தியடைய முடியாது தானே.

சீலன், கனடா.

"மனிதமே"

உன் வாசனைக் காற்றில்
சுடலைச் சூழல் கூட - ஒரு தைரியத்துடன்
வீசுகிறது.
என் சுவாச நரம்புகள்
மனித மணத்தை நுகர்ந்த போது
மனிதத்திற்கு ஒரு மங்களம் கூறின...
மனிதமே உனக்கு ஒரு இலங்கை மணம்
மங்களம் கூறுகிறது -
மணப்பாயா தொடர்ந்தும்.

மாத்தளை - இளைய அப்துல்லாஹ்

www.tamilarangam.net



# ஏகாதிபத்தியங்களின் சதுரங்கத்தில்: குர்திஸ்தான்



ROKIA இவள் ஒரு குர்திச தாய், வட ஈராக்கின் DOKUK நகரத்தில் இருந்து வெளியேறிய அகதிகளில் ஒருத்தி. இவள் முதுகில் மூன்று மாத பெண் குழந்தை. இக்குழந்தையோ மூன்று மணித்தியாலமாக பேச்சு மூச்சில்லாமல் கிடக்கிறது.

ROKIA, HAIORMANN PASS என்னும் ஈரானிய எல்லை நுழைவாயிலை நோக்கியே செல்கிறாள். HAIORMANN 2000 m உயரமான மலைப்பகுதி இந்த மலைப்பகுதி, பல லட்சக் கணக்கான ஈராக் குர்திச அகதிகளின் அவலங்களால் நிரம்பி வழிகிறது.

பனியை அள்ளித் தெறிக்கும் குளிர்காற்று. நள்ளிரவிற்கு இன்னமும் கொஞ்சப் பொழுது இருக்கும் நேரம். உடலை முறிக்கும் குளிரில் குளிரை எதிர்க்கும் வலுவற்றவர்களாய் கரடு முரடான மலைப்பாதைகளில் தவழும் அகதிகள்.

மீண்டும் ஒரு அவலக்கதறல், அது ROKIA.. «ஐயோ என் மகள் இறந்துவிட்டாள்» கத்துகிறாள்.. தன் குழந்தையை கையில் ஏந்தியவாறு ஓடி ஓடி தன்னை சூழவுள்ளவர்களுக்கு காட்டுகிறாள். கத்துகிறாள்.. தொண்டை


www.tamilarangam.net



கரகரத்து போய்விட்டது.

ROKIA வின் கதறல் HAIORMANN மலை முகடு முழுவதுமே அதிர்ந்தது. அவரது பார்வைபடும் தூரம் வரை இன்னமும் குர்திச அகதிகள் வந்துகொண்டிருக்கின்றனர். பத்திரிகையாளர்களின் கூற்றுப்படி 100 K.m தூரம் வரை அகதிகள் தொடர்படையாய் வருகின்றனர்.

இதுவரையில் 10,000 க்கும் அதிகமானோர் மாண்டு போயினர். இவர்கள் குளிராலும் பசியாலுமே இறந்து போகின்றனர். வேறு எந்தவித நோய்களும் தாக்குவதற்கு முன்பாக இதில் குழந்தைகளே அதிகமாக இறந்து போகின்றனர். துருக்கியில் உள்ள அகதி முகாம் ஒன்றில் மட்டும் நாளுக்கு 50 குழந்தைகள் பட்டினியால் இறந்து போவதாக செய்திகள் குறிப்பிடுகின்றன.




Piranshar இது மேற்கு அசர்பைசான் பக்கமாய் உள்ள ஈரானிய சிறு மாகாணம். நான்கு இலட்சத்துக்கும் அதிகமான குர்திச அகதிகள் படங்கு முகாம்களில் வாழ்கிறார்கள். இங்கே கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை. கால் புதையும் சேறு அழுக்குப்படிந்ததாய், அவலம் நிறைந்ததாய் இவர்களின் வாழ்வு!

இவர்களுக்கு மருத்துவ வசதி இல்லை. குடிதண்ணீர் இல்லை, எரிபொருள் இல்லை. குளிர்காக்கும் கம்பளங்கள் இல்லை. குழந்தைகளின் கால்களுக்கு சப்பாத்தும் இல்லை. குளிரோ மோசமான குளிர்.

www.tamilarangam.net



இந்த அகதிகள் எல்லோருக்குமே சென்ற ஒரு சில நாட்களுக்குள் வட ஈராக்கில் இருந்து வெளியேறியவர்கள். இவர்களில் வசதிபடைத்தவர்கள் சொந்த வாகனங்களிலும் டக்சிகளிலுமாக வந்து சேர்ந்தவர்கள். வறியவர்கள் நடையாகவே வந்தவர்கள். இவர்கள் எல்லோருமே தங்கள் அவலங்களைச் சொல்கிறார்கள்.

ஈராக்கிய இராணுவம் இவர்களுடைய வீடுகளை, குடியிருப்புக்களை சேதப்படுத்திவிட்டது. இவர்களில் அதிகமானோர் தமது குழந்தைகளை, கணவர்மாரை, சகோதரங்களை, உறவினர்களை ஈராக்கிய இராணுவத்திற்கு பலிகொடுத்து விட்டனர்.

இதே நிலைமைதான் துருக்கி எல்லையை அண்டியுள்ள Zahko மலைப்பகுதியில் வாழும் குர்திச அகதிகளின் நிலைமை... இந்த பகுதி மிகவும் பஞ்சப்பட்ட துருக்கிய குர்திச மக்கள் வாழும் பகுதி.

நாங்கள் சாப்பிட எதுவுமே இல்லை. எங்களுக்கு உதவுங்கள். நாங்கள் பட்டினியால் சாகப் போகிறோம்... இப்படி கத்துகிறாள் ஒரு ஈராக்கிய இளம் பெண்.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்பு ஏற்பட்ட மிகப் பெரிய அகதிகள் புலம்பெயர்வு இது என்று கணிப்பிடப்படுகிறது. கிட்டத்தட்ட இருபது இலட்சம் அகதிகள். இதில் பதினைந்து இலட்சத்திற்குமதிகமானோர் ஈரானில்.

ஐரோப்பிய பொருளாதார சமூகம், அமெரிக்கா உட்பட குர்திச அகதிகளுக்கு அவசர உதவிகள் செய்ய முன்வந்தன. ஆயினும் இவர்களின் உதவிகள் இந்த அகதிகளின் ஒரு நேர பசியைக்கூட முழுமையாக தீர்க்கவில்லை என்றே அறிய முடிகிறது.

ஏனெனில் ஈரானிலுள்ள குர்திச அகதிகளுக்கு 400 மி டொலர் ஐக்கிய நாட்டு அகதிகள் பிரிவும், 250 மி. டொலர் ஐக்கிய பொருளாதார சமூகமும் தருவதாக உறுதியளித்தன. ஆயினும் இதுவரை இந்த

www.tamilarangam.net



உதவிகள் அளிக்கப்படவில்லை. ஈ.ரானோ 15 மி. டொலர் ஒரு நாளுக்கு செலவளிப்பதாக சொல்கிறது.

இதற்கிடையில் அகதிகளுக்கு மருந்து உதவி செய்வதற்காக ஈ.ராறுக்கு வந்த அமெரிக்க பிரான்ஸ் டாக்டர்கள் தாம் திரும்பிப் போகப்போவதாக அறிவித்துள்ளனர். அகதி முகாம்களில் ஈ.ராக்கிய இராணுவத்தின் தலையீடும், C.I.A சேர்ந்த உளவாளிகள் இருப்பதான குற்றச்சாட்டுக்களுக்குமாகவே தாம் தொடர்ந்து பணியாற்ற முடியாது என்று அறிவித்துள்ளார்கள்.

இந்த குர்திச அகதிகள் எல்லோருமே ஈ.ராக்கிய இராணுவத்தின் தாக்குதலுக்கு குறிப்பாக நச்சு வாயுத் தாக்குதலுக்கு அச்சியே வெளியேறியுள்ளனர்.

நச்சு வாயுத் தாக்குதல் எவ்வளவு கொடூரமானது என்பது இவர்களுக்குத் தெரியும். 88ல் ஈ.ரான் - ஈ.ராக் யுத்தத்தின் போது ஈ.ரானிய எல்லைப்புற கிராமமான Halabaja வில் ஈ.ராக்கிய இராணுவம் நிகழ்த்திய நச்சுவாயுத்தாக்குதலை குர்திச மக்கள் அவ்வளவு எளிதில் மறந்திடுவார்களா? 5000 ஈ.ரானிய குர்திச சகோதரர்களை அவ்வளவா பலியெடுத்தது அந்த சதாமின் நச்சுவாயுத் தாக்குதல்.

வளைகுடா யுத்தத்தில் மிகப் பெரும் அழிவுகளை கொடுத்து புறமுதுகுகாட்டி ஓடிவந்த சதாமின் இராணுவத்திற்கும், அரசுக்கும் எதிராக ஈ.ராக்கிய மக்கள் கிளர்ச்சி செய்ய தொடங்கிய செய்தி எல்லோருக்கும் தெரியும்.

இதில் முன்னணியில் நின்றவர்கள் குர்திச மக்கள்தான். ஏனெனில் இந்த மக்கள் ஈ.ராக்கிய அரசின் ஒடுக்கு முறைக்கு உட்படும் ஒரு தேசிய இனம். குர்திச மக்கள் மட்டுமன்றி Schliten Assyeren, SUNNITEN போன்ற இன்னும்பிற சிறுபான்மை இனத்தவர்களும் தமது தனித்துவங்களுக்காக, சுதந்திரத்திற்காக, அடிப்படை ஜனநாயக உரிமைக்காகவே போராடுகின்றார்கள்.

www.tamilarangam.net



குர்திச மக்கள் தமக்கென பாரம்பரிய பிரதேசங்களையும் தனித்துவமான கலாச்சார மரபுகளையும் கொண்டவர்கள். இவர்கள் ஈராக்கில் மட்டுமல்ல ஈரான், சிரியா, துருக்கி, சோவியத் யூனியன் போன்ற நாடுகளின் எல்லை வளையத்திற்குள் வாழும் ஒரு புராதன இனம்.

| நாடுகள். | சனத்தொகை மில்லியன் அண்ணளவு | பரப்பளவு $K.m^2$ |
|---|---|---|
| துருக்கி | 12 | 230,000 |
| ஈராக். | 7 | 70,000 |
| ஈரான் | 5 | 170,000 |
| சிரியா | 1 | 15,000 |
| ரஷ்யா | 4 லட்சம் | |

இஸ்ரேலில் 90,000 பேர் உள்ளனர். குர்திஸ் பாஷையானது இந்தோ ஜேர்மானியக் கலப்பு.

9000 ஆண்டுகால பழமை வாய்ந்த வரலாற்றை கொண்டவர்கள் என அமெரிக்க-ஜேர்மனிய தொல்பொருள் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இந்த குர்திச மக்களின் வரலாறு முழுவதுமே யுத்தமும் ரத்தக்களரியும் நிறைந்தே வந்திருக்கின்றது. இவர்களின் வாழ்வு அவலமானது. இவர்களின் வரலாறு பாலைவனமானது. இவர்களின் சங்கீதங்களோ இதை உணர்த்துகிறது.

இவர்களுக்கென ஒரு பாரம்பரிய பிரதேசம் உண்டு. அது குர்திஸ்தான் எனப்படுகிறது. அதன் பரப்பளவு 490,000 $K.m^2$ ஆயினும் அது ஒரு தேசமாக ஒரே கொடியின் கீழ் ஆட்சி செய்த சுதந்திர நாடாக வரலாற்றில் இருந்ததாய் தெரியவில்லை. அராபிய, மொங்கோலிய, மற்றும் ஐரோப்பியர்களின் நாடுபிடிக்கும் வெறிப்போட்டிகளின் மைதானமாகவே இந்த குர்திச மண் இருந்திருக்கிறது. இதே வேளை இந்த அவலத்துக்கு குர்திச மன்னர்களும் பகடைக்காய்களாய் அவ்வப்போது இருந்திருக்கிறார்கள்.

உண்மையில் இவர்களின் தேசியத்தை கொடூரமாய் காயப்படுத்தும் முதல் நிகழ்வு 1514 இல் தான் நிகழ்கிறது.

இந்த வரலாற்று நிகழ்வுகளை அடுத்த இதழில் பகிர்ந்து கொள்வோம்.

க. தீபன்.

www.tamilarangam.net





Bob Marley

# ரேகே இசையும் பொப்மாலியும்

★ 1991ம் ஆண்டு மே மாதம் 11ம் திகதி பொப்மாலியின் 10வது நினைவு நாள்.

- ரீட்டா பொரஸ்: தமிழில் தேவா.

★ பொப்மாலியின் கறுப்பும் றெகேயின் சீரழிவும்.

« கலையின் அதி உன்னதபடைப்புகள் சமுதாயத்திற்கு எதிரான குணாம்சங்களைக் கொண்ட எத்தர்களால் கொள்முதல் செய்யப்படுகின்றது. அதேகதியில் இயற்கையை வெல்லும் மனிதர்கள் மற்று மனிதர்களுக்கோ அல்லது சமுதாயத்திற்கு அந்நியமான நடவடிக்கைகளுக்கோ அடிமையாகிறார்கள் » - மார்க்ஸ்

1980இல் மான்லியின் அரசு C.I.A யின் குலைப்புத்தந்திரங்களால் வீழ்த்தப்பட்டு 600க்கும் அதிகமான இளைஞர்கள் வீதிகளில் உயிர்பறிக்கப்பட்டு வீசியெறியப்பட்டனர். மான்லி அரசு ரசியாவுக்கு சார்பாக இருந்ததால் அமெரிக்கா இங்கு ஆட்சிமாற்ற நாடகத்தை அரங்

www.tamilarangam.net


தேற்றி எட்வேட் சேகாவை பதவியில் அமர்த்தியது. சேகா பதவியில் இருந்த காலங்களில் றேகனின் நிலைப்புக்கு எந்தவொரு நம்பிக்கையும் இல்லாது போயிற்று. அமெரிக்காவில் 1981இல் றேகன் பதவியேற்றபின் முழுக்க முழுக்க சேகாவின் மூலம் ஜமேக்காவை அமெரிக்காவின் அடிவருடி நாடாக மாற்றினான். அமெரிக்க வானொலிகள், வானொலிகள் எல்லாம் ஜமேக்கா அபாயமற்ற நாடு என்றும் உல்லாசப் பிரயாணிகளுக்கு கவர்ச்சியான இடம் என்றும் விளம்பரங்கள் செய்தன. ஜமேக்காவை கரிபியன் தீவுகளில் ஜனநாயகமாதிரியாகக் காட்டவும் இதற்கு உதவியாக அமெரிக்கப் போர்க்கப்பல்களும் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டன இதன்மூலம் ஜமேக்காவை ஆள்வது யார் என்று றேகன் நிர்வாகம் காட்டிக்கொண்டது.

> 1981 இல் இளவேனிற் காலத்தில் பொப்மாலி புற்று நோய் காரணமாக இறந்தார். ஆனாலும் இவரது மரணம் இன்னும் விடுவிக்கப்படாத புதிராகவே இருக்கின்றது. ஆனால் பெரும்பாலான பணமுதலைகளுக்கும் அரசியல் தலைவர்களுக்கும் இவர் மரணம் நிம்மதியை கொடுத்தது.

எட்டு வருடங்களாக மான்லியின் 'சோசலிச' அரசாங்கம் கியூப ரசிய அரசுகளின் துணையோடு எதுவித மாற்றங்களையும் சந்திக்காது ஒரு கெடுபிடிக்குள் பொலிஸ் ராட்சியமாகவே இருந்தது. இந்த வேளையிலும் கூட முரட்டுத்தனமான ரஸ்தபாரிகளையோ, பொப்மாலியையோ அடக்கிவைக்க முடியவில்லை. பொப்மாலியின் இசையில் இருந்த எழுச்சியும், வேகமும், உறுதியும் கடைசிவரை இருந்து கொண்டுதான் இருந்தது. பலரேகே கலைஞர்களும் அவ் உறுதியுடன்தான் இருந்தனர்.

www.tamilarangam.net



இது எனது முடிவல்ல
நான் ஓர் போராளி
தொடர்ந்த தாக்குதல்கள்
ஒரு மனிதனை முரடனாக்கும்
அதனால் தான் நான் ஒரு போராளி
றேகே போராளி! ரஸ்தா போராளி!

- பொப் மாலி

பொப் மாலியின் மரணம் இசையுலகில் ஒரு மிகப்பெரிய தாக்கத்தை சர்வதேசத்தில் ஏற்படுத்தி றேகே இசையை மக்கள் மத்தியில் முன்னெப்போதுமில்லாத அளவில் தாக்கத்தை செலுத்தியது. இதனால் பல புதிய றேகே கலைஞர்கள் வாய்ப்பு பெற்றாலும் ஐலண்ட் கம்பனி ஒன்றும் செய்யாது இறுதிய காலத்திலான பொப் மாலி அனுதாப அலையை பழைய ஒப்பந்தத்திலான பாடல்கள் மூலம் காசாக்கிக் கொண்டது. புதிய பாடல்களை இசைத்தட்டாக வெளியிடுவதை விட்டு பழைய பாடல்களை மீண்டும் பதிவு செய்வதே இப்போதைய கட்டத்தில் அதிகமாக நடந்து கொண்டிருக்கின்றது.

சந்தையில் ஓரளவு ஸ்திரமான வாய்புகள்பெற்ற பாடகர்களான ஜோர்ஜ் ஐசாக், ஸ்ரீல்புல்சி போன்றவர்கள் ஒரு சில புதிய பாடல்களையும் இசைத்தட்டாக அளித்துக் கொண்டிருந்தனர். இவர்களின் முகவர்கள் அளித்த பேட்டியொன்றில்

« றேக்கே இசையின் அற்புதமும் பிரபல்யமும் இனி முடிவடைந்து விட்டது இதற்காக நாங்கள் இனி செலவு செய்யத் தேவையில்லை றேக்கே தன்னைத்தானே காத்துக் கொள்ள வேண்டும் » என்றனர்.

ஐலண்ட் கொம்பனியைப் பொறுத்தவரை ஒரு குறிப்பிட்ட கால அளவில் றொக் (Rock) இசையைப் பிரபல்யப்படுத்துவதற்கான பணம்

www.tamilarangam.net



தரும் சாதனமாக இருந்தது. இப்போது றேகேக்கும் செலவழிக்காது பழைய பதிப்புகளை விற்றும் புதிய றேகே கலைஞர்களை அறிமுகப்படுத்தாமலும் இலாபம் மட்டுமே குறிக்கோளாக அடுத்த வருவாய் தரக்கூடிய இசையை நோக்கி நகர்ந்து கொண்டது.

கிங்ஸ்ரன் நகரில் கூட றேகே இசை அமெரிக்க, பிரித்தானிய இசையின் தாக்கங்களால் வெகுவாகப் பாதிக்கப்பட்டதோடு வானொலிகளில் கூட இடம்பெறாத நிலையை எட்டியது. றேகே இசை சாதாரண இசைக் கலைஞர்களின் ஆதிக்கத்தில் இருந்து லாபநோக்குள்ள தயாரிப்பாளர்கள் நிலைக்கு தாவி கருத்தாளமில்லாத தூரநோக்குப் பார்வையற்ற இலாபநோக்கு மாத்திரம் உள்ள ஏமாற்றுப் பேர்வழிகளையும் தன்னுள் ஈர்த்துக் கொண்டது. இரசிகர்களுக்கும் கலைஞர்களுக்குமான இடைவெளி தூரமாகி இரசிகர்களை தரமான இசையால் வெல்லாது தங்களுக்குள்ளேயே குழுக்கள் பலப்பரீட்சை செய்து கொண்டது. தொழில்நுட்ப வசதிகள் போதாக்குறை காரணமாக மேடைகளில் நேரடியான பாடல் முயற்சிகள் குறைந்துபோய் இசைத்தட்டினை மாத்திரம் வைத்துக் கொண்டு பின்னணி பாடி கலைஞர்கள் இரசிகர்களைச் சந்தித்தனர். இது ஒரு புதுப்பாணியாக மாறி இசைத்தட்டு இசையுடன் பாடி புதிய பாணிகளில் நடனமாடி "புதுமை" படைத்த கலைஞர்களாக களியாட்டங்கள் கொண்டாட்டங்களில் பாடி றேகே தரந்தாழ்ந்து போயிற்று.

<<< எல்லாக்கலைகளுக்குமே அரசியல் அடிப்படையானது. ஏனெனில் எல்லாக் கலைஞர்களுமே மற்றெல்லோரையும்போல் அரசியல் சார்புகளுடன் தான் இருக்கின்றனர். தேவைக்கேற்ப தங்கள் படைப்புகளில் அரசியல் கருத்துக்களை வெளிக்கொண்டுவருவார்கள். கலை மனிதனின் வேறுபட்ட விதமான தேவையைப் பூர்த்தி செய்

www.tamilarangam.net



இதனை ஒழிய அரசியல் கல்வி அளிப்பதற்கான அமைப்பை கொண்டதாக இல்லை. இசை அரசியல்களிக்கு ஒருவாயிலாக அமையுமென்று கருத்து சில பத்து வருடங்களாக விவாதிக்கப்பட்டு வருகிறது. திரிபுவாதிகள் "கலைஞர்கள் அரசியல் அறிவுடையவர்களாகவும் அரசியல் தலைவர்களாகவும் செயல்படுகின்றார்கள்" என்று பிரச்சாரமும் இந்த விவாதத்தை மேலும் குழப்புவதாகவே இருக்கின்றது. >>> • ரீட்டா பொரஸ்.

தனது கறுப்பு முகத்தை வெள்ளைமுஞ்சியாக்கி கொட்டமடிக்கும் மைக்கல் ஜக்சன் போன்ற கூத்தாடிகள் மத்தியில் புகழின் உச்சியை அடைந்தபோதும் எளிமையாகவே வாழ்ந்து, மக்களை நேசித்து அவர்களின் பிரச்சினைகளை.........;
அமெரிக்க, ரசிய வல்லரசுகளின் ஆதிக்க நோக்கங்களை...........;
அரச அடக்குமுறைகளை.......; பாடல்கள் மூலம் அம்பலப்படுத்திய கலைஞன் பொப்மாலி இறந்து 10 வருடங்களாகின்றன. நகைச் சுவை நடிப்பின் மூலம் அன்றைய 2ம் உலகப்போரின் கொடுமைகளை மக்களை சென்றடையவைத்த சார்லி சப்ளின் போன்ற ஜனநாயக நெஞ்சம் கொண்ட கலைஞர்கள் வரிசையில் வைத்துப்பார்க்கப் படவேண்டியவர்* பொப்மாலி. அதனால் தான் ரீட்டா பொரஸ் எழுதிய இக்கட்டுரையை தொகுத்து மனதில் கொண்டு வந்தோம்.


"அவர்கள் எவ்வளவு மூர்க்கமாக என்னை எதிர்க்கிறார்களோ
அவ்வளவு நிச்சயமாக அவர்கள் வீழ்வார்கள்.
ஓர் அடிமையாய் பொம்மையாய் வாழ்வதைவிட
ஓர் சுதந்திர மனிதனாய் கல்லறையில் இருப்பேன்."

- பொப்மாலி நினைவாக

• முகிலவு.

www.tamilarangam.net





அடை மழை பெய்து சற்று இடை வெளி
முற்றமெல்லாம் ஒரே பிசுபிசுப்பு.
கால்வைத்தால் சறுக்கிவிழக்கூடிய பாசி.
இவற்றுக்கு ஆதரவாக நடைகற்கள்
கால்கள் நடக்கப் பழகிக்கொண்டன.
வீட்டின் பின்புறத் தாவாரத்தில் இரண்டு ஆடுகள்.
அவை அகோரமாக வாய்பேச முடியாத நிலையிலும்
தம் பசி உணர்வை வெளிப்படுத்தின.

# உணர்வுகள் சாகவில்லை.

அம்மாவின் நச்சரிப்பால் நார்க்கடகத்தை எடுத்து சைக்கிளில்
வைத்துக்கொண்டு தோட்டத்தை நோக்கி
நகர்ந்தேன்.
தெரு எங்கும் மழையின் சோகம்
மனித முகங்களிலும்தான்
ஏன் என்று தெரியவில்லை.

கிணற்றடிப் பள்ளத்தருகில் சைக்கிளை நிறுத்திவிட்டு
புல்பூண்டு பிடுங்கலாம் என உசாரானேன்.
மீண்டும் மழையின் சிணுங்கல்.
ஆடுகால் பூவரசின்கீழ் சற்று இருந்தேன்.
வாடகமும் சோளகமும் மாறி மாறி வந்து
உச்சி முகர்ந்து சென்றன.
தென்கிழக்கு மூலையில் கருமுகில் குடிகொண்டு இருந்தது.
"ஓ" இண்டைக்கு சரியான மழை வரும்போல கிடக்கு
முணுமுணுத்தபடி அண்ணார்ந்து பூவரச மரத்தை நோக்கினேன்.

சோகம் சுமந்து வாடி வதங்கி பெண்குயில் ஒன்று,
என் கால்கள் நகர மறுத்தன.

www.tamilarangam.net



குயிலைப் பார்க்க எனக்கு என்னவோ போல் இருந்தது.
சோகம் சுமந்து நிற்கும் தன்மையை மட்டும்
என்னால் ஊகிக்க முடிந்தது.
மனம் கேட்கவில்லை துணிந்து விட்டேன்
குயிலினைப் பார்த்தேன் பரிகாசமாகவா இல்லை
பரிதாபமாகவா எனக்கே புரியவில்லை.
என்னிலமை அதற்கு விளங்கி இருக்குமோ என்னவோ
மானுடனே என்ற தீனக்குரல்.

நானும் மானுடத்தின் பெண்ணாய் பிறந்தவள் தான்.
ஊழ்வினைப் பயன் பறவையாகிவிட்டேன்.
மானுடத்தின் உணர்வுகள் என்னைவிட்டு சாகவில்லை.
என் தாய் என்னை காக்கையின் கூட்டில் முட்டையாக்கிவிட்டாள்
மாற்றாந் தாயின் வெப்பத்தில் குஞ்சானேன்.
காக்கா, காக்கா என்று கத்துவதற்கு பதிலாக
கூக்கூ, கூக்கூ என எனது அரிச்சுவட்டை ஆரம்பித்தேன்.
மாற்றான் என உணர்ந்த காக்கைக் கூட்டம் தன்
இன சனத்துடன் என்னை விரட்டிவிட்டது
அன்று தொட்டு இன்று வரை
என் வாழ்வு தனிமைதான்.

மானுடனே என்ன யோசிக்கின்றாய்
நானும் அழகானதொரு குடும்பத்தில் பிறந்து
வளர்ந்து சிட்டாய் சிறகடித்தேன்
கால சக்கரம் என்னை கன்னியாக்கியது.
சடங்குகளில் நான் சல்லாபித்தேன்
பாவாடை தாவணியில் கொலு வருவேன்
பாடசாலை நாட்கள் எத்தனை இனிமையானது.
சந்தோசத்தின் எல்லைக்கு என்ன அர்த்தம்
என உணர்ந்தேன்.

www.tamilarangam.net



வாழ்க்கைச் சக்கரம் எத்தனை கொடுமையானது
குடும்பப் பொறுப்பு சிறு தொழில் செய்தேன்.
வயிற்றுக்குப் போதுமானது
இடையில் குறுக்கிட்டான் மானுடன் ஒருவன்
கண்டான் என்னை காதல் கொண்டான்
இளமையின் வேகம் சிறுபிள்ளையாதும் அறியேன்
ஆசை வார்த்தைகள் அள்ளி சொரிந்தான்
கட்டியணைத்தான் கூடினான் குலாவினான்
நினைவுச்சின்னம் வயிற்றில் வளர்ந்தது.
காமுகன் முந்தியே திருமணம் ஆனவன்
கொதித்தேன் எழுந்தேன்
என்ன செய்ய முடியும்.

சில சில்லறைகளை தூக்கி எறிந்தான்
என் கற்பின் விலைக்கா?
வளர்ந்து வரும் சிசுவின் இரைக்காகவா?
அழுதேன் கொடியவன் தொலைந்தான்
வயிற்றில் வளர்ந்த வம்சம்
வயிற்றுடனே சங்கமமானது.

பெற்றோர் சுற்றம் மீண்டும் என்னை மணக்கோலத்தில்
காணவிரும்பியது.
என்வாழ்வு மீண்டும் வளர மலர வாழ்வுதர
நல்ல ஜீவன்கள் முன்வந்தன.
என் குற்ற உணர்வு இசையவில்லை.
தவறிப்போனவள் சந்தர்ப்பத்தில் பேசும்.
குடும்ப உறவு முறியும்.
இப்படியே காலத்தைக் கடத்த விரும்பினேன்
என்விருப்பு வெற்றி பெற்றது.

www.tamilarangam.net



கொடிய நோய்க்கு இரையானேன்.
என்ன நடந்தது என எனக்கே தெரியவில்லை
குயிலாகிவிட்டேன்.
என் உணர்வுகள் இன்னும் சாகவில்லை.
சிணுங்கியது, விழித்தேன்.
மாணுடனே போய் வருகின்றேன் என
ஓலமிட்டு பறந்தது.

கருமேகத்திரள்கள் ஆகாய வெளி எங்கும்
பரந்து காணப்பட்டன.
ஓ" வந்த வேலையை மறந்துவிட்டேன்
மனம் இன்றி நார்கடகத்தை நிரப்பினேன்
நகரமறுக்கும் கால்களுடன்
சைக்கிளை நோக்கி விரைந்தேன்
கனத்த நெஞ்சுடன். - மனோகரன் -

# போதனை !

• கலா நேசன்

பொறுத்துப் போ
என்பதுதான்
அம்மாவின்
பொதுவான கருத்து
அடிமைத் தனத்திற்கு
அத்திவாரம்
ஆனால்
சுடுமணல் புழுவாய்
புகுந்த வீட்டில் அவள்!



www.tamilarangam.net



விவாதம்.

# எமது போராட்டத்தில் இயக்கங்களின் சிக்கலான பாத்திரம்

யுத்தம் நடக்கிறது. இலங்கை இனவெறி அரசின் இராணுவத்தை எதிர்த்து புலிகள் மோதுகிறார்கள். எதிரியின் கொடூரங்கள் பயமாக மனதை ஆக்கிரமிக்க --- மக்கள் திகைக்கிறார்கள். இராணுவம் புலிகளின் தாக்குதலை உடைத்துக் கொண்டு வந்துவிட்டாலோ மக்கள் தாம் நிர்க்கதியாக நிற்பதாக உணர்கிறார்கள். புலிகளின் தடுப்பு யுத்தத்தை மீற முடியாமல் இராணுவம் முடங்கும்போது மக்களின் நிர்க்கதியான மன உணர்வுக்கு ஆன்மிக ரீதியில் புலிகள் பெரும் ஆறுதல் அளிக்கிறார்கள்.

« எங்கடை பெடியள் ---- இல்லாட்டில் ஆமி வந்து வெட்டியிருப்பான் » என்ற குரல் கேட்கும்.

யுத்தம் ஓய்கிறது. புலிகள் சமூகத்தின் பக்கம் திரும்புகிறார்கள். மாற்று இயக்க உறுப்பினர்கள், ஜனநாயகத்துக்காக குரல் கொடுக்க முனைபவர்கள் தேடி அழிக்கப்படுகிறார்கள்.

அடிப்படை ஜனநாயக உரிமை எதுவுமே சமூகத்தில் இல்லை. ராஜினி கொலை செய்யப்பட்டது பற்றி 'வணக்கத்துக்குரிய' யாழ். ஆயரை பத்திரிகையாளர் அபிப்பிராயம் கேட்கிறார்.

« அபிப்பிராயம் எதுவும் இல்லாமல் இருப்பதே நல்லது.
---- தேநீர் ஆறிவிடும் ---- குடியுங்கள்! »

என்கிறார் யாழ். ஆயர்!

ஜனநாயகத்தின் நிலை அப்படி!!

இந்த இரு நிலைமைகளும் தமிழ் மக்களின் வாழ்வை இயக்குகின்றன. இன ஒடுக்கு முறைக்கு எதிராக ஆயுதம்

www.tamilarangam.net



தாக்கி நிற்பதில் போராளியாகவும், சமூகத்துக்கு எதிராக நிற்பதில் ஒரு 'பாசிஸ்ட்' ஆகவும் புலிகள் மாறிமாறி வகிக்கும் பாத்திரம் இன்று பல முரண்நிலைகளை தோற்றுவித்துள்ளது. ஒருவித குழப்பமான நிலைமை! எது சரி? எது பிழை? புலிகளை ஆதரிப்பதா? எதிர்ப்பதா? ------ இப்படியே!

« என்ன இருந்தாலும் அவங்கதானே போராடுறாங்கள்! »

என்ன இருந்தாலும்-----
என்ன இருக்கிறது? என்பதே பிரச்சினை!
பேச, விமர்சிக்கக்கூட உரிமை இல்லை.
ஜனநாயகமுமில்லை ஒரு மண்ணுமில்லை!
பிறகு யாருக்கு போராட்டம்?

என்ற விவாதங்கள் மலிவானதும் தரமானதுமாக கிடைக்கிறது.

மற்றைய இயக்கங்களை தடைசெய்து/அழித்து தம்மை ஒரு தனிப்பெரும் சக்தியாக்கினார்கள் புலிகள். இன ஒடுக்குமுறைக்கு எதிராக - தமது வலுவுக்கு எட்டிய வரையில் - போராட தயங்காத சிறிய இயக்கங்களைக்கூட இன்றுவரை புலிகள் அனுமதிக்க தயாராக இல்லை. மாறாக அவர்களையும் தேடி அழிப்பதில் ஈடுபடுகிறார்கள். இப்படியிருக்க----- 'புலிகள் மட்டுமே போராடுகிறார்கள்' என்று கூறுவது அதற்குரிய சுய நியாயத்தை மட்டுமே கொண்டிருக்க முடியும்; பொது நியாயத்தை அல்ல! அதாவது தற்போது போராட்ட களத்தில் புலிகள் மட்டுமே நிற்கிறார்கள் என்பது உண்மை. ஆனால் 'மற்ற சக்திகள் எல்லாமே போராட்டத்தை விட்டு ஓடி துரோகம் இழைத்து விட்டன அல்லது போராட தயாராக இல்லை; எஞ்சியது புலிகள் மட்டுமேதானே' என்பதாக இருக்க முடியுமா?

www.tamilarangam.net



இல்லை என்பதே ஆகும்.

மேலும் இன்னொரு கேள்வியும் எழுகிறது. மற்ற சக்திகளை போராட அனுமதிக்காத புலிகள் இலங்கை இராணுவத்துக்கு எதிராக யுத்தம் புரிவது இன ஒடுக்குமுறைக்கு எதிரான **போராட்டம்** என்று (அதன் முழு அர்த்தத்தில்) நம்பமுடியுமா?

இன்னொரு கோணத்திலிருந்து பார்த்தால் தமிழ் மக்களின் மீதான இனஒடுக்குமுறையை துடைத்தெறிய புறப்பட்டுவிட்டு அச் சமூகத்தின்மேல் பாசிசத்தை பிரயோகிப்பது எந்த வகை?

ஆக, தமிழ் மக்களின் தேசிய விடுதலையை புலிகள் இயக்கம் வென்றெடுக்கப் போவதில்லை என்பதே தெளிவானது. ஆனால் தற்போது தேசிய இன ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டக் களத்தில் ஒரு தனிப்பெரும் சக்தியாக அது தன்னை நிறுவிக்கொண்டுள்ளது. எனவே தமிழ்மக்களின் நலன்கள் சில புலிகளின் 'போராட்டத்தோடு' பின்னிப்பிணைந்துள்ளன. இது ஒரு சிக்கலான நிலைமைதான்!

எனவேதான் "புலிகளை முதலாம் எதிரியாக கொள்வதோ புலிகளுக்கு எதிராக யுத்தம் தொடுப்பதோ தமிழ்மக்களின் தேசிய நலன்களுக்கும் தீங்கு விளைவிப்பதாகும்" என்ற கருத்தும் முன்வைக்கப் படுகிறது. தற்போதைய நிகழ்வுகளில் போராட்ட சூழலை மாற்றியமைக்க முடியாமல் அல்லது முயற்சிக்காமல் இருந்துகொண்டே 1ம் எதிரி, 2ம் எதிரி என தந்திரத்தை பிரயோகிக்க முனைவது தவறானதாகும். உண்மையில் புலிகளின் போராட்டக் களம் ஒரு மக்கள் யுத்தத்துக்கான போராட்டக் களமாக மாற்றப்படும் முயற்சியில் உருவாகக்கூடிய சூழலே இதைத் தீர்மானிக்கும்.

www.tamilarangam.net



எந்த ஓர் ஒடுக்கப்படும் இனமும் அந்த ஒடுக்கு-முறைக்கு எதிராக போராடியே தீரும் என்பது வரலாறு. தமிழ் மக்களினைப் பொறுத்தவரை அந்த போராட்டக் களத்தை புலிகள் ஆக்கிரமித்துவிட்டனர். எனவே தேசிய இன ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தின் எந்த புதிய வடிவமும் புலிகளின் போராட்டத்துடன் 'சம்பந்தப் படாமல்' இருப்பது சாத்தியமில்லை.

எனவேதான் ஒரு சில சிறிய இயக்கங்கள் புலிகளின் தேசிய இன ஒடுக்கு முறைக்கு எதிரான 'போராட்டத்தில்' ஐக்கியப்படும் ஓர் அணுகுமுறையை கருத்துரீதியில் முன் வைக்கிறார்கள்.

« ---- மக்களின் அடிப்படையான தனிமனித உரிமை, மாற்றுக் கருத்துக்களை உடைய இயக்கங்களை அங்கீகரித்தல் போன்ற ஜனநாயகப் பாதுகாப்புக்கான முன்நிபந்தனைகள் இல்லாத பட்சத்தில் புலிகளுடனான ஐக்கியம் ஆபத்தானது. »

என சென்ற 'மனிதம்' இதழில் வாசன் முன்வைத்த கருத்து கவனிக்கற்பாலது.

எப்படியோ ஒரு புது வடிவம் தேவை! . வந்தடைந்துள்ள வரலாற்றுச் சூழலை பூச்சியமாக்கிவிட்டு முதலிலிருந்து புது-சாக போராட்ட வடிவத்தை தொடங்க முடியாது. அதை நினைத்து பச்சாதாபப்பட மட்டும் இயலும். இதிலுள்ள சிக்கலையும் ஆபத்தையும் தீர்மானிப்பதில் சூழலின் பங்கு கணிசமானதாக இருப்பதால் ஜனநாயக சக்திகளுக்கு இன்று இது ஒரு சவாலாகவே உள்ளது.

புலிகளுக்கு எதிராக செயற்படும் மற்ற இயக்கங்கள் (EPRLF, ENDLF, TELO, PLOT, EPDP) எப்படியாவது

www.tamilarangam.net



புலிகளை பழிவாங்க வேண்டும் என்று துடிக்கிறார்கள். இந்திய/இலங்கை அரசுகளோடு கூட்டுச் சேர்ந்தாவது இதை சாதிக்க வேண்டும் என்ற ஒரு அங்கலாய்ப்பு! புலிகளை அழிப்பதில் இந்திய இராணுவத்தோடு EPRLF, TELO, ENDLF கூட்டுச் சேர்ந்தன. தமிழ் மக்களின் எதிர்யாக இந்திய இராணுவம் செயற்பட்டபோது இக் கும்பல்கள் அதற்கு உடந்தையாகச் செயற்பட்டன. மற்ற குழுக்கள் இதில் குளிர்காய்ந்தன. அதேபோல் இப்போ EPDP, PLOT என்பன இலங்கை இராணுவத்துடன் கூட்டுச்சேர்ந்துள்ளன.

எந்த இன ஒடுக்குமுறைக்கு எதிராக தமிழ்மக்கள் போரா டினார்களோ அந்த இன ஒடுக்குமுறையாளர்களுடன் கூடிச் சேர்ந்து நின்று, இனஒடுக்குமுறைக்கு எதிரான போரா ட்டக் களத்தில் 'முகாமிட்டிருக்கும்' புலிகளை அழிக்கும் பிரமை பிடித்து திரிகிறார்கள். இதன்மூலம் புலிகளின் 'போராட்டத்தோடு' பிணைந்துள்ள தமிழ்மக்களின் (சில) நல ன்களுக்கும் எதிரான சக்தியாகிவிடுகிறார்கள்.

கொழும்பில் டக்ளஸ் தேவானந்தா (EPDP) பத்திரிகையா -ளர் மாநாடொன்றில் -----

« தமிழ் மக்களின் நலன்களுக்காகவே நாம் புலிகளுடன் மோதுகிறோம் » என்று பதிலளிக்கிறார்.

இதை ஒரு விவாதத்துக்கு ஏற்றுக் கொண்டால்கூட, இன ஒடுக்குமுறையை ஏவும் அதே எதிரியிடம் - இன்று மேலாதிக்க நிலையில் நிற்கும் எதிரியிடம் - ஐக்கியப் பட்டு தமிழ் மக்களின் நலனுக்காக எப்படி செயற்படுவது?

சிந்தியுங்கள்! . ஆக, புலிகளை பழிவாங்குவதே ஒரே நோக்கு; இதற்குமேல் எதுவுமே இல்லை.

www.tamilarangam.net



உண்மையில் தமிழ் மக்களின் நலனில் அக்கறை இருந்திருந்தால் 'இயக்க அழிப்பின்' **பின்னரும்** இவ் இயக்கங்கள் இலங்கை அரசுக்கு எதிரான போராட்டத்தை நடத்தும் தமது **இலக்கை** கைவிடாமலே, தமது போராட்ட வடிவத்தை மாற்றியிருக்க வேண்டும். புலிகளிடமிருந்து தம்மை தற்காத்துக்கொள்ளும் தந்திரோபாயங்களுடன் சிலவேளை தலைமறைவாக அல்லது சாத்தியமாகக்கூடிய தமது கட்டுப்பாட்டு பிரதேசங்களில் காலூன்றி நின்றிருக்கலாம்; புலிகளின் இப் பாசிசபோக்குக்கு எதிராக போராடும் சரியான முறைகளை வகுத்திருக்கலாம்; அதற்கான ஐக்கிய முன்னணிக்கு முயற்சித்திருக்கலாம். இவை எதையுமே தமிழ் மக்களின் நலனை முன்னிறுத்தி செய்யவில்லை. புலிகளை பழிவாங்குவதையே தமது இலக்காக வைத்தே தமது 'அணுகுமுறைகளை' வகுத்தார்கள்.

« புலிகள் முன்பு அவர்களை (EPRLF, TELO, PLOT) அழித்தார்கள்; அதனால்தானே இந்த நிலை? » என்கின்றனர் சிலர். 'மக்கள் நலனைக் கொன்றுதான் நாம் உயிர்வாழ வேண்டுமென எந்த இயக்கமாவது கருதினால் (!) அது தற்கொலை செய்வதுகூட சமுதாயத்துக்கு செய்யும் நன்மையாக இருக்கும்' என்றொரு உணர்ச்சிகரமான பதில் கிடைக்கிறது.

சரி, நாம் நிதானமாக அக் கேள்வியை நோக்குவோம். அதில் பகுதியளவு உண்மை இருக்கிறது.

ஒரு புரட்சிகர இயக்கமாக அவை வளர்ச்சியடையாத நிலை அப்போ இருந்தன. அவர்களும் பொது எதிரிக்கு (இலங்கை அரசுக்கு) எதிராக 'போராடினார்கள்'.

www.tamilarangam.net



ஜனநாயக உள்ளடக்கமும் அராஜக உள்ளடக்கமும்
இவ் இயக்கங்களுள் (மாறுபட்ட அளவுகளில்) நிலவின. ஜன-
நாயகப் பண்பின் வளர்ச்சிக்கான உட்கட்சிப் போராட்
டங்கள் இவ் இயக்கங்களை ஜனநாயக அல்லது அராஜக
வகைக்குள் வரையறுத்திருக்கும் வாய்ப்பைக் கொடுத்திருக்
கும். இதற்குப் பதிலாக , வெளியிலிருந்து புலிகளின் 'பாசி-
சம்' இவ் இயக்கங்களை தாக்கியது. இது இவ் இயக்கங்
களுள் அராஜகப் பண்பை தாண்டி மேல்நிலைக்கு கொண்
-டுவருவதில் மிக கணிசமான பங்கை வகித்தது; ஜனநாயக
பண்பு நாசமாக்கப்பட்டது.

இயக்கத்துள் ஜனநாயகப் பண்புக்காக போராட
முடியாத கையறுநிலையிலும் , புலிகளை பழிவாங்கும் அராஜக
கும்பலாக இயக்கம் குறுகிப்போவதற்கு உடந்தையாக தயா
ராகாத நிலையிலும் வெளியேறிய ஜனநாயக சக்திகளையும்
புலிகள் தேடி அழித்தார்கள். இந் நடவடிக்கை பாசிசத்
தன்மை வாய்ந்தது.

புலிகள் மற்ற இயக்கங்களை தடைசெய்யும்போது
அல்லது அழிக்கும்போது முன்வைத்த காரணங்கள் அனை
த்துமே உண்மையானதுமல்ல. அன்று இவ் இயக்கங்களுள்
ஜனநாயகத் தன்மை காணப்பட்டது. எனவே அவைகளை
அழிக்க முயற்சித்த புலிகளின் செயல் பாசிசத் தன்மை
கொண்டது. அவைகளை வெறும் பழிவாங்கும் கும்பலாக
---- அதைச் சாதிப்பதற்கு எதிரியோடுகூட கூட்டுச்சேரும்
துரோகக் கும்பலாக ---- மாற்றியதில் புலிகளின் பாத்திரம்
கணிசமானதுதான்!

ஆனால் இந்த உண்மையை அவர்களின் இன்றைய

www.tamilarangam.net



நிலைப்பாட்டிற்கு ஒட்டுமொத்த காரணமாகிவிட முடியாது. தமது துரோகத்தனத்துக்கு நியாயத் தன்மையைக் கொடுக்கவும் முடியாது. அதனாலேயே இவர்களது அழிவு மக்களிடம் குறைந்தபட்சம் அனுதாபத்தைக்கூட ஏற்படுத்தவில்லை.

« இலங்கை அரசுக்கெதிராக போராடும் புலிகள் ஏன் சமூகத்துக்கு எதிராக பாசிஸ்டாக செயற்படுகிறார்கள்? »

புலிகளின் இலக்கு இந்த இரு போக்கினதும் சந்திப்பில்தான் இருக்கிறது. புலிகள் இந்திய இராணுவத்துடன் யுத்தம் புரிந்தார்கள்; இலங்கை இராணுவத்துடன் யுத்தம் புரிகிறார்கள். புலிகளின் இந்த 'போராட்டங்களில்' தமிழ்மக்களின் நலன்கள் சில பின்னிப்பிணைந்துள்ளன. ஆனால் தமிழ்மக்களின் நலனை முன்னிறுத்தி போராடுகிறார்களா? என்றால் இல்லை என்பதே பதிலாகும். அவர்கள் தமது நலன்களையே முன்னிறுத்துகிறார்கள். இதற்கு எதிராக அமையக்கூடிய தமிழ்மக்களின் மற்றைய நலன்களை ஒடுக்குகிறார்கள்; ஜனநாயக சக்திகளை தேடி அழிக்கிறார்கள்.

இலங்கை அரசுடன் 14 மாதகாலம் புலிகள் பேசினார்கள்.

× ஆயுதத்தை கீழே போட மறுத்தமை
× குடியேற்றத்தை எதிர்த்தமை
× ஆறாவது திருத்தச் சட்டத்தை வாபஸ்பெற கோரியமை

இவற்றில் உறுதியாக நின்றார்கள். இன ஒடுக்குமுறைக்கெதிரான ஆயுதப் போராட்டத்தை அடகுவைப்பதோ, பாரம்பரிய பிரதேசங்கள் பறிபோவதோ, சுயநிர்ணய உரிமையை விட்டுக் கொடுப்பதோ தமிழ் மக்களின் நலன்களுக்கு எதிராக அமைந்துவிடும்.

www.tamilarangam.net



அதேநேரம் மக்களை நம்பாமல் தம்மையும் ஆயுதத்தையும் மட்டுமே நம்பும் புலிகள் ஆயுதத்தைக் கீழே போடுவது தனக்குத் தானே சவக்குழி தோண்டியதாக அமைந்துவிடும். அதுமட்டுமல்ல பிரச்சினைகளை அரசியல் ரீதியில் அணுகுவதைவிட,

'---- இல்லாட்டியல் வைப்பம்' என்ற இராணுவ உச்சாடனத்துடன் இராணுவ ரீதியில் அணுகுவதிலேயே பழக்கப்பட்டு விட்டவர்கள். ஆக, அவர்கள் தங்களை ஒரு அரசியல் சக்தி என்பதைவிட 'இராணுவ அமைப்பு' என்ற பலத்துள்-தான் தம்மை நிறுத்தியுள்ளார்கள்.

இந் நிலையில், அவர்கள் எப்படி ஆயுதத்தை கீழேபோட முடியும்? இராணுவ ரீதியில் பாதகமாக அமையக்கூடிய குடியேற்றப் பிரச்சினையை எப்படி அவர்களால் விட்டுவைக்க முடியும்?

புலிகளின் யுத்தங்கள்/தாக்குதல்கள் பேச்சுவார்த்தையையும் அரசியல் பேரத்தையும் இலக்காக வைத்தே நிகழ்த்தப்படுகின்றன. இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது, PLOT, EPRLF குழுக்களுக்கெதிராக இலங்கை இராணுவத்தின் உதவியோடு தாக்குதல் தொடுத்தார்கள்; அத்தோடு சென்னையில் EPRLF தலைவர்களை படுகொலை செய்தனர். முன்னர் திம்பு பேச்சுவார்த்தையில் பங்குகொள்ள மறுத்த JR அரசை நிர்ப்பந்திக்குமுகமாக இந்திய உளவுப்படை (RAW) இன் ஆலோசனைப்படி அநுராதபுர படுகொலையை நிகழ்த்தினார்கள். இந்திய இராணுவத்துக்கு எதிரான யுத்தத்தை "ஆக்கிரமிப்பாளருக்கு எதிரான போர்" என்று பிரகடனப்படுத்தினார்கள்; ஓய்வற்ற யுத்தம் புரிந்தார்கள். ஆனால் அண்மையில் இந்தியா சென்ற (புலிகளின்

www.tamilarangam.net



பேச்சாளர்) காசி ஆனந்தன்,

“ நாங்கள் இந்தியாவின் பக்கமே இருக்க விரும்புகிறோம். இந்தியாவின் நலனுக்கெதிராக நாம் என்றும் செயற்பட்டதில்லை. இந்திய இராணுவ - புலிகள் மோதல் மிகவும் துர்அதிஸ்டவசமானது. இரு தரப்பினரும் அதை ஒரு கெட்ட கனவாக மறந்துவிட வேண்டும். ” என்று கூறினார். தொடர்ந்த செய்தியாக “எந்தவொரு சமரசத் தீர்விலும் இந்திய மத்தியஸ்தமே புலிகளின் விருப்பம் ” என்று கிட்டு கூறியிருப்பதும் பத்திரிகை தலைப்புச் செய்திகளாக வெளிவந்தன. புலிகள் தமது நலனை வென்றெடுப்பதில் - பேரத்தை நடத்தி முடிப்பதில் - இந்திய அரசுடன் கூட்டுச்சேர மாட்டார்கள் என்பதற்கு நம்பிக்கை தரக்கூடிய எந்த ஆதாரங்களோ வரலாற்று அனுபவங்களோ இல்லை என்பதை இச் செய்தி -கள் நினைவூட்டுகின்றன.

இவர்கள் என்னத்தைத்தான் கேட்கிறார்கள் ? இது இலங்கை அரசுக்கும் புரியவில்லை. இலங்கை அரசுடன் பேசினார்கள். ‘அரசியல் நீரோட்டத்தில்’ 14 மாத காலம் இருபட்டது. என்ன பேசினார்கள் ? . இன்றுவரை மக்க-ளுக்கும் தெரியாது. ஆனால் ‘எங்கள் தாகம் தமிழீழ தாயகமே’ என்று அப்போதும் புலிகள் சொல்லிக் கொண்டுதானிருந்தனர். எனவே இலங்கை அரசு ஒரு பேரத்தை நடத்தி முடிப்பதில் ஒரு முடிவுக்கு வரமுடியாமல் சங்கடப் படுகிறது. புலிகளை பலவீனப்படுத்தி குறைந்த பேரத்துக்கான முன்நிபந்தனைகளை உருவாக்க முயற்சிக்கிறது. இதுவே இலங்கை அரசின் தரப்பில் இந்த யுத்தத்துக்கான அவசியமாக மேலெழுந்துள்ளது.

www.tamilarangam.net



புலிகள் ஒரு 'தவறிழைக்கும் விடுதலை இயக்கம்' என்ற ஒரு கருத்தும் சிலரால் முன்வைக்கப் படுகிறது. இச் சொற்பதம் விசாலமான கருத்தைக் கொண்டது. ஒரு சரியான அரசியல் போக்கையோ , பிழையான அரசியல் போக்கையோ கொண்ட இயக்கங்கள் தவறிழைக்கும் இயக்கமாக இருக்கலாம். இரண்டுமே ஒரே வகைப்பட்டதா?

சரியான அரசியல் போக்கை கொண்டிருக்கும் இயக்கம் தனது தவறுகளை களைந்து முன்னேறமுடியும். ஆனால் புலிகள் தவறான அரசியல் போக்குள்ள இயக்கம் ஆகும். அது தவறுகளை களைவதற்கான சாத்தியத்தை எது உருவாக்கப் போகிறது?

« அதிசயம் ஏதாவது நடந்தால் ஒழிய---- » என்ற 'பிரஜைகள்' (தூண்டிலில்) எழுதியது இங்கு பொருத்தம்!

தேசிய விடுதலைப் போராட்டத்தை ஒரு மக்கள் யுத்தமாக மாற்றியமைக்கும் அடிப்படையையே நிராகரித்தவர்கள் புலிகள். இந்த பிழையான அரசியல் போக்கு சமூகம்மீது பாசிசத்தைப் பிரயோகிக்கவும் , தேசிய விடுதலை யுத்தத்துக்குப் பதில் முன்னேறி தாக்கமுடியாத தற்காப்பு யுத்தமாக குறுகிப்போவதற்கும் பாதை அமைத்தது.

அடுத்தது என்ன?

ஒரு அரசியல் பிரளயம் நடந்து---- சரியான அரசியல் போக்கு மேலெழப் போகிறதா?

அல்லது அரசியல் பேரமா?

அல்லது இன்னொரு பங்களாதேசா?

▸ பாலமோகன் ◂

www.tamilarangam.net





# சுவிஸ்: பெண்கள் முனைந்தால் அனைத்தையும் நிறுத்தமுடியும்

இவ்வருடம் சுவிற்சலாந்து தனது 700 வது ஆண்டு விழாவினை கொண்டாடி வருகின்றது. இவ்வேளையில் சுவிற்சலாந்து பெண்கள் தமது உரிமைகள் சட்டரீதியாக வெற்றுக்கடதாசிகளில் எழுதி குப்பைக் கூடைக்குள் வீசப்பட்டுள்ளதால் நடைமுறையில் இச்சட்டம் அமுலில் இல்லை என்பதனை அம்பலப்படுத்துவதற்காக June 14ம் திகதியை "பெண்கள் வேலை நிறுத்த" தினமாக தீர்மானித்துள்ளனர்.

இந்நாட்டில் வேலை நிறுத்தம் என்பதன் அர்த்தம் தனி எதிர்ப்பை தெரிவிப்பதாகவே அர்த்தப்படுகின்றது. ஏனெனில் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவது சட்ட விரோதமாக கணிக்கப்படுகின்றது. இவ்வெதிர்ப்பு தினத்தின் நடாத்துவதில் பெண்கள் தொழிற்சங்கங்கள், சுயாதீன அமைப்புகள் முன்நிற்கின்றன. (வலதுசாரி கட்சிகள் மட்டுமே இத்தினத்தினை எதிர்த்து வருகின்றன.)

இவ்வமைப்புகள் வெளியிட்ட துண்டுப்பிரசுரங்களில் இருந்து சத்தான விடயங்கள் கீழே மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

மேற்படி துண்டுப்பிரசுரத்தில் "பெண்கள் முனைந்தால் அனைத்தையும் நிறுத்தி விட முடியும்" என்ற தலைப்பினையே கொடுத்துள்ளனர். இவ்வாசகம் பெண்களின் சக்தியை எடுத்துரைப்பதாக உள்ளது. 1981ம் ஆண்டு June 14ம் திகதி சுவிற்சலாந்து

www.tamilarangam.net



சமஷ்டிப்பாராளுமன்றத்தில் "ஆண்களும் பெண்களும் சம உரிமை உடையவர்கள். குடும்பவேலை, கல்வி போன்ற அனைத்து விடயங்களிலும் சட்டரீதியாக சமமாக மதிக்கப்படுவோர். ஆண், பெண் இருபாலாருக்கும் தகுதிக்கேற்ப சமமான சம்பளம் வழங்கப்படும்" என்ற சட்டம் தீர்மானிக்கப்பட்டு அமுலாக்கம் செய்வதாக அறிவிக்கப்பட்டது. இவ்வருடம் June மாதத்துடன் 10 வருடங்கள் பூர்த்தியாகின்றது. நடைமுறையில் இச்சட்டம் குறைந்த பட்சம் எதனையும் மாற்றி அமைக்கவில்லை என்பதனை பின்வரும் விடயங்கள் மூலம் தெரிவுபடுத்தியுள்ளனர்.

* பெண்கள் ஆண்களை விட குறைவான சம்பளத்தினையே பெறுகின்றனர்.
* தாய்மாருக்கும், வீட்டுவேலையை மட்டும் கவனித்து வரும் குடும்பப்பெண்களிற்கும் சமூக காப்புறுதி செய்வதற்கான திட்டங்கள் எதுவும் முன்வைக்கவில்லை.
* வீட்டுவேலையை தனியே பெண்களின் சமாச்சாரமாகவே கருதப்படுகின்றது.
* உயர்பீட பதவிகள் ஆண்களுக்கு உரியதாகவே கருதப்பட்டு பெண்கள் உயர்பீடங்களுக்கு வருவது கடினமாக உள்ளது.

பெண் தொழிலாளர்கள் இச்சட்ட அமுலாக்கத்திற்கு முன்னர் ஆண்களை விட 32.2% குறைவான சம்பளத்தினையே பெற்றுள்ளனர். அலுவலக பெண் தொழிலாளர்கள் ஆண்களை விட 31.1% குறைவான சம்பளத்தினையே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெற்று வந்ததாகவும், 1981ம் ஆண்டிற்கு பின்னரும் இதே நிலையே தொடர்ந்து காணப்படுவதாகவும் புள்ளி விபரங்களை ஆதாரமாக கொடுத்துள்ளனர்.

தாய்மாருக்கும் வீட்டுவேலையின் மட்டும் செய்யும் குடும்பப் பெண்களிற்கும் வயது முதிர்ந்த காலத்தில் வேலை ஓய்வுக் காப்புறுதி உத்தரவாதம் கொடுக்கப்பட வேண்டும் எனவும், விவாகரத்து செய்த பெண்களிற்கு வேலை ஓய்வுக் காப்புறுதி மிகவும் குறைந்த தொகையினையே கொடுத்து வருவதாகவும், இந்நிலை பெண்களை புதிய ஏழ்மைக்கு தள்ளும் எனத்தெரிவித்து உள்ளனர்.

வீட்டுவேலைகள் இன்னும் பெண்கள் சமாச்சாரமாகவே கருதப்படுகின்றது. ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களிலும் பெண்கள் தான் அனைத்து வீட்டு வேலைகளையும், பிள்ளைப்பராமரிப்பினையும் செய்ய வேண்டி உள்ளது. வேலைக்கு செல்லாமல் வீட்டு வேலையினை செய்யும் பெண்கள் பெரும்பான்மையாக உள்ளனர். வீட்டு வேலைக்காக வேலைக்குச் செல்லாமல் இருக்கும் ஆண்கள் யாராவது உள்ளனரா? என்ற கேள்வியை எழுப்பி உள்ளனர். பெண்கள் மட்டும் பகுதி நேர வேலை செய்து; வீட்டுவேலையையும் கவனித்து வருகிறார்கள் ஆண்களிற்கும் பகுதி நேர வேலைக்கான அனுமதி கொடுக்கப்பட வேண்டும். இருபாலாரும் பகுதி நேர வேலைக்கான அனுமதியும் வேலை நேர குறைப்பும் செய்ய வேண்டும் என கோரியுள்ளனர்.

259 பாரிய நிறுவனங்களில் ஒரு நாளில்

www.tamilarangam.net



சேகரிக்கப்பட்ட தகவல்கள் பின்வருமாறு:
122 நிறுவனங்களில் உயர்பதவியில் ஒரு பெண்கள் கூட கிடையாது. 71 நிறுவனங்களில் 5% இற்கும் குறைந்த பெண்களும், 38 நிறுவனங்களில் 10% இற்கும் குறைந்த பெண்களும், 28 நிறுவனங்களில் 10% இற்கு மேலாகவும் இருப்பதாகவும் மேற்படி நிறுவனங்களில் 652 பெண் எழுதுவினைஞர்களும் 17704 ஆண் எழுதுவினைஞர்களும் வேலை செய்கின்றனர். பெண்கள் 3.2% ஆகவே காணப்படுகின்றனர்.

பிள்ளைப்பராமரிப்பு, சிறுவர் பாடசாலைகள் மேலதிகமாக அமைத்து கொடுக்க வேண்டும் எனும் கோரிக்கைகளையும் முன் வைத்துள்ளனர்.

இந்நிலை மாற்றப்பட வேண்டுமெனவும் இவ் எதிர்ப்பு தினத்தின் போது வேலை செய்யும் இடங்களில் துண்டுப்பிரசுரம் வெளியிடுவது, சிவத்த உடை அல்லது பட்டி அணிந்து எதிர்ப்பை தெரிவிப்பது என ஆலோசனைகள் கூறப்பட்டுள்ளன.

இவ்வெதிர்ப்பு தினத்தினை வலது சாரிக்கட்சிகளின் பெண்கள் அமைப்புகள் தேவையற்றதென தெரிவித்து உள்ளனர். இவ்வகையில் தொலைக்காட்சி வானொலி, பத்திரிகைகளில் பெண்கள் அனைத்து வேலையையும் செய்ய அனுமதி உள்ளது. Appenzeller மாநிலத்தில் தற்பொழுது பெண்களிற்கு வாக்குரிமை கொடுக்கப்பட்டுள்ளது. இதைவிட இவர்களிற்கு என்ன தேவை என்ற வகையில் கட்டுரைகள், தொலைக்காட்சி வானொலி நிகழ்ச்சிகள் ஏளனம் செய்து வருகின்றன.

தமிழாக்கம்: ம.நரேந்திரன்.

www.tamilarangam.net



## பங்களாதேஷ் :

### சூறையாடும் சூறாவளி.

மே மாத முற்பகுதியில் பங்களாதேசில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினாலும் சூறாவளியினாலும் 2 லட்சம்பேர் உயிரிழந்தும் 2½ லட்சம் பேர் காயமடைந்தும் 25000 மீனவர்கள் காணாமல் போயும் ஒரு கோடிக்கும் அதிகமான மக்கள் தமது இருப்பிடங்களை இழந்தும் உள்ளதோடு ஒரு லட்சத்திற்கு மேலான கால்நடைகள் உயிரிழந்தும் உள்ளது. மணிக்கு 260-300 கி.மீற்றர் வேகத்தில் வீசிய பயங்கர புயலினால் கடல் நீர்மட்டம் 6 மீற்றருக்கு உயர்ந்து பங்களாதேசின் கடற்கரைப் பிரதேசங்கள் யாவும் நீரில் மூழ்கியது. முதலில் ஏற்பட்ட வெள்ளம் வடிந்து செல்லும் நிலையில் இரண்டாவது தடவையும் புதிய வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதனால் 25 கிராமங்கள் நீரில் மூழ்கியதுடன் 40 பேர் இறந்துள்ளனர் அத்துடன் முதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கான மீட்பு வேலைகளும் உதவிகளும் தடைப்பட்டது.

பாதிக்கப்பட்ட மக்களின் 80 வீதமானோருக்கு தொற்று நோய் கண்டுள்ளதாகவும் அசுத்தமான நீரை பருகுவதாலும் பிணங்களுக்கு மத்தியில் வாழ்வதாலும் தொற்று நோய்கள் பரவும் அபாயம் பெருகி வருவதாகவும் மீட்பு பணிகள் மிகவும் மந்த கதியிலேயே நடைபெறுவதாகவும் அகதி சேவை நிறுவனங்களின் செய்திகளில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இருந்து அறிய முடிகிறது. பங்களாதேசின் புவியியல் ரீதியான அமைவிடம் அடிக்கடி இத்தகைய இயற்கையின் அனர்த்தங்களுக்கு ஆளாக காரணமாக இருந்து வருகிறது. இதுவரை 34 புயல்கள் வங்க தேசத்தை தாக்கியுள்ளது.

1970ம் ஆண்டு வீசிய புயலினாலும் வெள்ளப் பெருக்காலும் 5 லட்சம் மக்கள் உயிரிழந்தனர் வங்காள விரிகுடாவில் மையம் கொண்டு வடக்கு நோக்கி வீசும் புயல் நேரடியாக எதிர் கொள்ளும் கரையமைப்பை பங்களாதேஷ் கொண்டுள்ளமையே இதற்கு முக்கிய காரணமாகும்.

இந்தியாவின் மேற்குக்கரையோரம் பர்மாவின் கிழக்கு கரையோரம் போன்றவையும் அடிக்கடி பாதிக்கப் பட்ட போதிலும் அவை வங்கிற்கு சமாந்தரமான கரையமைப்பை கொண்டுள்ளமையால் இத்தகைய பெரும் அழிவுகளை ஏற்படுத்துவதில்லை. இவ் வெள்ள அபாயத்திற்கு உதவுவதற்கு பல்வேறு நாடுகளும் சுகசேவை நிறுவனங்களும் பல்வேறு உதவிகளை வழங்கி வருகின்றன. அமெரிக்கா உதவி யென்ற பெயரில் வளைகுடாவில் இருந்து திரும்பிக் கொண்டிருந்த இராணுவ அணியில் ஒன்றை வங்காள தேசிற்கு அனுப்பியுள்ளது. 8 யுத்த கப்பல்களில் வந்த அமெரிக்க துருப்புக்களை இந்த வெள்ளப் பெருக்கு புனர்வாழ்வு நடவடிக்கையில் ஈடுபடுத்துவதாக அறிவித்துள்ளது. இதை எதிர்த்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**Nur Für Freundkreis**

புதிய சந்தா விபரம்
தனிப்பிரதி . 3 S.Fr.
ஒரு வருடம் . 22 S.Fr.
ஐரோப்பிய நாடுகள் . 25 S.Fr.
(தபால் செலவு உட்பட)

வாசகர்களே!
விமர்சனங்களையும்
ஆக்கங்களையும்
வரவேற்கிறோம்!
• ஆர். குழு •

வங்கிக் கணக்கு இல:
SPAR KONTO : 0094- 157146- 60- 1

வங்கி முகவரி:
"BüCHER VERKAUF"
SCHWIZERISCHE KREDITANSTALT

SWITZERLAND

பல்கலைக்கழக மாணவர்களும் எதிர் கட்சிகளும் ஆர்ப்பாட்டம் செய்துள்ளன.

சூறாவளி வெள்ளப் பெருக்கு பூமியதிர்ச்சி போன்ற இயற்கையின் தாக்கங்களை தடுக்க முடியாவிட்டாலும் அதன் அறிகுறிகளை முன்னுணர்ந்து அப்பகுதிகளில் இருந்து மக்களை வெளியேற்றி பராமரிப்பதற்கான திட்டங்களோ முன்முயற்சிகளோ அந்நாட்டு அரசுகளிடம் இல்லாமையே இவ்வாறான அட்சக்கணக்கான உயிரிழப்புகளுக்கு காரணமாகும்.

-வரதன்-

அமெரிக்க ஐக்கிய நாட்டின் தெற்கு மாநிலங்களில் உள்ள 30,000 ஏழைக் குடும்பத்தினர் இணைந்து வேளாண்மையை வியாபாரமாக்குவதை எதிர்த்து கூட்டுறவுகளை அமைத்துள்ளனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தொலைப்பு

பத்துமணி பஸ்சும்
பகல் நிலவாய் வெளிச்சமும்
சினிமாப் பாடலுமாய்
இருந்த ஒட்டல்களும்
பத்திரிகைக் கடையும்
பழக் கடையும்
வாகனங்கள் விரைந்து செல்லும்
வீதிகளும்
சினிமாப் போஸ்ரரும்
தெருக் கடையும்
வண்டிக்காரனும்
இப்போ இல்லைத்தான்
ஆனால்
ஓயாத தொழுகையில்
உறங்கிப் போன
உஸ்மானும் நபீதாவும்
இப்போ எங்கே
அவர்களின் பின்னே
நாமும்
காணாமல் போய்விடுவோமோ !

• கலாநேசன் •